ஜின்னாஹ் ஷரீபுத்தீனின்

# முத்து நகை

அன்னை வெளியீட்டகம்
மருதமுனை

# முத்து நகை

ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

அன்னை வெளியீட்டகம்
"தமிழகம்"
மருதமுனை, ஸ்ரீலங்கா

# MUTHU NAGAI

(Poems)

by Dr. JINNAH SHERIFUDEEN

(C) All rights reserved

First published in April 1989

By
ANNAI VELIYEETTAKAM
"TAMILAKAM"
MARUDAMUNAI, SRI LANKA

Rs. 60/-

Printed by:
MILLATH PRINTERS,
16, Appu Maistry Street,
MADRAS - 600 001.

# சமர்ப்பணம்

அன்னைதந்தைக் கடுத்தென்னை ஆதரித்தும்
அடாததுநான் செய்கையிலே அடித்தும்வைத்தே
இன்னிலைக்கு நான்வரநற் காரணமென்
ருனவெந்தன் மாமனல்ஹாஜ் இபுரு கீம்மேல்
மன்னுலகுக் கவர்முன்னே சென்றடைந்த
மவுலவியாம் என்மச்சான் சமதென் போர்க்கும்
முன்னவனின் நல்லாசி வேண்டித் தாழ்ந்து
முறையாகச் சமர்ப்பித்தேன் இன்னூல் மாதோ.

"பல்கலை வேந்தர் சில்லையூர் செல்வராசன்"
அவர்கள் அளித்தது

# தொழுவதற்கோர் பாட்டு!

அல்லாஹ்வின் நாமத்தாலே
ஆசிப் பா தொடங்குகின்றேன்
சில்லாலைச் செல்வராசன்!
ஜின்னு ஷரிபுத் தீனின்
வல்லாண்மைக் கவிக் களத்தில்
வளருக! முத்து முத்தாய்
எல்லாலை போற் சுடர்க,
இவன் கோக்கும் கவி ஒவ்வொன்றும்

★ ★ ★

காலை ஞாயிற்றின் வீச்சுக்
கதிர்களாய் எறிக்கும் ஜின்னுஹ்
வாலைப் பாக் களினுற் கூன் பா
வாடையின் கூதல் தீர்த்தேன்!
சோலையின் தென்றல் வந்தென்
தோள் தழு விஞற் போல் இந்த
நூலை நான் நுகர்ந்தேன்! வாழ்வேன்
நூருண்டு! ஓம்! இன்ஷா அல்லாஹ்!

+ + +

கவி மக ராய் உயிர்த்துக்
கவிதை யோடே வளர்ந்து
கவிதையில் உய்த்துச் செஞ் சொற்
கவிதையே தாமாய் ஆகிக்
கவிதைக்கே ஆயுள் முற்றும்
கடப்படுத் துகின்ருேர் பாங்கின்
குவி மைய மாய் இம் முத்துக்
குவை நகைத் தொகை நூல் கண்டேன்!

\+ + +

பட்டுப் போல் நெய்த அச்சாப்
பனுவல்கள் மரபைத் தேற்றிச்
சிட்டுக்கள் நிதமும் பாடும்
கிண்கிணி இசைக் கீதங்கள்
தொட்டுக் கண் களிலே ஒற்றித்
தொழுவதற் குகந்த சொற்கள்
வட்டுறுப்பான கொள்கை
வைப்பெல்லாம் கொண்ட திந் நூல்!

\+ + +

வகையுளி வாராப் பாடல்
வரிகளே எழுத வல்லார்
தொகை அருகிய தற் காலச்
சூழலில் ஜின்னுஹ் முத்து
நகையினுல் மயங்கி வார்த்தை
நளினத்தால் மனம் பிணித்து
முகை அவிழ்விக் கும் பூம் பாக்கள்
முகருங்கள் இனிப் போய்ச் சொக்கி!

போக முன் எச்சரிக்கை!
புதுக் கவி நூல் இஃதன்று!
தாகமும் தவிப்புமாய்த் தூய்
தமிழ்க் கவி மாந்தித் துய்க்கும்
வேகம் உற்ருேர் சற்றே வி
வேகமாய் நிதானிப் பீரேல்
''பாகமாம் கல்லார்க்கேனும்
பரம்பரை வித்தை ஓர்வீர்!

\+ + +

செல்லாத சொல்லும் செம்மைச்
சீர், தளை, தொடை மற்றும் கோள்
இல்லாத வெறுமை யாப்பும்
இருக்கின்ற பாக் களத்தில்,
அல்லாஹ்வின் நாமத்தால் என்
ஆசிப் பா பெற்று ஜின்னுஹ்
வில்லாலே பதர்கள் வீழ்க!
வித்தகன் என்போல் வாழ்க!

பல்கலை வேந்தர்
சில்லையூர் செல்வராசன்.
''செல்வ மாளிகை''
49/7 வைவ் வீதி
கொழும்பு—5
தொலைபேசி :583969.

நாடறிந்த நாவலாசிரியரும், சிறந்த கவிஞருமான
''மருதூர்க் கொத்தன்'' ஜனுப் V.M. இஸ்மாயீல்
அதிபர் அவர்கள் வழங்கியது.

# உண்மைக்கென் சாசனம்

தேனோடு பாலும் பழரசமும் ஆருகி
மானோடுங் காவில் மறுகுதல்போல்—தேனன
செந்தமிழிற் பாவின்பம் செய்கின்ற ஜின்னுஹ்தன்
தந்தைக்கு வாய்த்தமகன் தான்.

மொழியை முறையாய்ப் பயிலாதோர் செய்யும்
நலிவு விலே போகும் நாளில்—தெளிவான
செஞ்சொல்லில் யாப்பமைதி கொஞ்சக் கவிபாடும்
அஞ்சொல் கவிஞன் அவன்.

புலவர்மணி ஆமுஷ புத்திரனே என்னத்
தலைநிமிரும் ஜின்னுஹ் தனித்து—நிலையான
பாணியிலே சொல்லுகின்ற பக்குவத்தைக்
காணுகின்றேன்
மேனிலத் தாமிவனோர் மேதை.

எழை அழுதகண் ணீரெனது நாடகத்தில்
பாளை உடைந்துப்படர்ந்த—மலர்வாய்
நடித்தகதா நாயகனும் நம்பியிந்த ஜின்னுஹ்
எடுத்ததெலாம் காணும் எடுப்பு.

வஞ்சிப்புக் காளாகி வாழ்க்கையின் கீழ்க்கோட்டில்
துஞ்சுகின்ற மக்கள் துயர்மாய—நெஞ்சுயர்த்தி
நீபாட வேண்டுமதை நான்கண்டு நாவினிக்கப்
பூபாளம் பாடப் புவி.

மருதூர்க் கொத்தன்

நாடறிந்த ஈழத்தின் பிரபல கவிஞர் ''பாண்டியூரன்''
திரு. கு. கணபதிப்பிள்ளை ஆசிரியர் அவர்கள் தந்தது.

# இவர் பற்றி என் கருத்து

எள்ளென்று லெண்ணெ யினிய மருக்கொழுந்தின்
சுள்ளென்றுற் செந்தேன் கருத்தொன்றும்—
தெள்ளுற்ற
'ஜின்னாஹ்' சரிபுத்தீன் நெஞ்சந் தொடும்பாக்கள்
பொன்னென்றே கொள்ளும் புலன்.

எதுகவிதை யென்றே யிடறிக்கோ லேந்திப்
புதுக்கவிதை தேடும் புவியில்—புதுக்கவிதை
தூவி யறுவடை துல்லியமாய்க் கண்ட 'ஜின்னாஹ்'
பாவியலை வென்றார் படைத்து.

சந்தம் பொருளாண்மை சார்ந்த வுவமைகள்
கந்தம் விரவிக் கமழ்சோலை (ச்) — சந்தன
மென்றே நுழைந்தோ ரினிய பயன்துய்ப்பர்
வென்றிட் டார் 'ஜின்னாஹ்' விரைந்து.

இசுலா மியப்பண் பிழையோட 'ஜின்னாஹ்'
வசமாக்கிப் பாடும் மரபை—அசலென்றே
கொள்ளும் குணமுத் திரைகள் படிப்போரி
னுள்ளம் பரவு மூவந்து.

புலவர்மணி யாரின் புதல்வ ரிவ ரென்ற
பலன்கண்டேன் வையம் பரவ-நலந்தேர்
செழுமையும் யாப்பின் செறிவுஞ்ஜின் னாஹ்முன்
தொழுமென்றே சொல்வேன் துணிந்து

பாண்டியூரன்

கவிஞர் அல் அஸூமத் அவர்கள் தந்தது.

# தமிழ் வாழும் உள்ளம்

தாதைமணி வித்துவத்தில் மேதை;
தாரமிவர்க் குதவிநுகர் கோதை;
தமிழ்வாழும் உள்ளம்:
தண்கவிதா இல்லம்;
ஷரிபுமகன் வித்துவமோர் காதை.

வீங்குதலே மத்தியிலிப் பட்சி
விடுதலையாய்த் திரிகிறதோர் உச்சி!
வெண்பாவின் யாப்பாய்
மெய்மொழியின் காப்பாய்
வேடனையும் வேட்டையிடுங் கட்சி!

நாமொழியில் தீன்மதுரம் பாய்ச்சி
நமக்களித்தார் ஜின்னாஹ்பால் காய்ச்சி,
நற்கவிதைக் கோனாய்
நலப்பதினா ருனாய்
நாளுமினி வளருகவோல் ஓச்சி.

20-03-'88 —அல் அஸூமத்.

# வெளியீட்டுரை

நபிகளாரின் வாக்கினையும், வாழ்வினையும் இஸ்லாத்தின் வரலாற்றுப் பாதையிலே நடந்த தியாகச் சம்பவங்களையும் கருப் பொருளாகக் கொண்டு எழுதப்பட்ட எமது முதலாவது வெளியீடான டாக்டர் ஜின்னாஹ்வின் ''பாலையில் வசந்தம்'' எனும் கவிதை நூலுக்கு வாசக அன்பர்கள் வழங்கிய ஆதரவின் உந்துதலினால் விளைந்ததுவே முத்து நகை.

பாலையில் வசந்தத்திற்கு தாங்கள் வழங்கிய ஆதரவு போன்று டாக்டர் ஜின்னாஹ்வின் '**முத்து நகை**'க்கும் தங்கள் மேலான ஆதரவை வழங்குவீர்கள் என்ற பெருநம்பிக்கை எமக்கு உண்டு.

தங்கள் எழுத்தோவியங்களை வெளியிட முடியாது அங்கலாய்க்கும் திறமைசாலிகளின் ஆக்கங்களை வெளிக் கொணர தங்கள் ஆதரவு என்றும் எமக்குத் தேவையான தாகும். எமது பணி தொடர தங்கள் ஒத்துழைப்பினை வழங்குவீர்கள் என்ற வெகுவான நம்பிக்கையோடு எமது பணிதனைத் தொடர்கிறோம்.

**அன்னை வெளியீட்டகம்**
''தமிழகம்''
மருதமுனை
ஸ்ரீலங்கா.

# சில வார்த்தைகள் ...

1947 ம் ஆண்டு, அப்போது எனக்கு வயது நான்கு. அக்கரைப்பற்று முஸ்லிம் ஆண்கள் பாட சாலையின் தலைமை ஆசானாக எனது தந்தையார் பணியாற்றி வந்தார்கள். அந்நாட்களில் மேல்வகுப்பு மாணவனாக விருந்த நாடறிந்த எழுத்தாளரான ஜனாப் அ.ஸ. அப்துஸ் ஸமது அவர்கள் "இளைஞன்" என்ற கையெழுத்துப் பத்திரிகை ஒன்றினை நடாத்தி வந்தார்கள். அப்பத்திரிகையில் என் தந்தையார் எழுதிய குழந்தைப் பாட்டொன்றும் வெளிவந்திருந்ததாம். அதனை அவர்களே சொல்ல நான் கேட்டிருக்கின்றேன்.

"பள்ளிக்குப் போமகனே - ஜின்னாஹ்
பாடம் படி சுதனே
அள்ளிச்சோறு தின்னுவாய் - ஜின்னாஹ்
ஆனந்த மாயிருப்பாய்"

என்பன அதன் முதலிரு அடிகளாகும். இப்பாடல் எனக்காக என் தந்தையாரால் அன்று பாடப்பட்டது. என் கல்வியின் ஆரம்பமே கவிதையோடுதான் ஆரம்பமாயிற்று.

எனக்குப் பத்து வயதான போது என் தந்தையாரின் பணிப்பின் பேரில் என் மூத்த இருவருடன் நானும் "விவேக சிந்தாமணி" என்ற இடைக்காலப் புலவர்களின் பாடற் தொகுப்பொன்றினை மனனம் செய்தேன். இன்றும் அப் பாடல்கள் நினைவில் நிலைத்து நிற்கின்றன. அன்று கவிதையில் ஏற்பட்ட தூண்டுதல் பள்ளியில் மேல் வகுப்பு மாணவனாக இருந்த போது எங்கள் தலைமை ஆசிரியர் ஜனாப் ஏ.எச். முஹம்மது அவர்கள் மிகச்சுவை பட கம்பராமாயணத்தைக் கற்பித்தபோது அதிகமாயிற்று. கல்லூரி நாட்களில் பலரின் கவிதைகளையும் படிக்கும் சந்தர்ப்பங்களும் என் ஆவலை அதிகமாக்கின. 1965 களிலிருந்து நானே கவிதைகளை எழுத ஆரம்

பித்தேன். என் தந்தையாரும், அண்ணன் ''பாண்டியூரன்'' அவர்களும் அவ்வப்போது என் தவறுகளைத் திருத்தி என்னை ஊக்குவித்தனர். அவர்களின் சிபார்சுடன் 1970 களிலிருந்து என் கவிதைகள் ''தினபதி'' பத்திரிகையில் தொடர்ந்து பிரசுர மாயின. சில ''தினகரனிலும்'' வெளியாயின.

1980ல் முஸ்லிம் கலை, கலாசார அமைச்சினால் நடாத்தப் பட்ட ஹிஜ்ரா கவிதைப் போட்டியில் என் கவிதைகள் இரண் டாம் இடத்தையும் 1986ல் அதே அமைச்சினால் நடாத்தப்பட்ட மீலாதுந் நபி கவிதைப் போட்டியில் முதலாமிடத்தையும் பெற் றன. 1987ல் மலையகக் கலை இலக்கியப் பேரவை நடாத்திய அகில இலங்கைக் கவிதைப் ''போட்டியில் எனது கவிதைகள் முதலிடத்தையும் பெற்றன. ''சிந்தாமணி'' தொடர்ந்து எனது கவிதைகளைப் பிரசுரஞ் செய்து எனக்கு ஊக்கந்தந்தது. அது தந்த ஊக்கமும் மேலும் மேலும் நான் கவிதைகளை எழுத முக்கிய காரணமான தோடு இத் தொகுதி வெளிவரவும் உதவி யது என்பேன். என் வளர்ச்சிக்கு உதவி என்னை ஊக்குவிக்கும் இதன் ஆசிரியர் திரு. S.T. சிவநாயகம் அவர்களை இங்கு நான் நன்றியுணர்வோடு குறிப்பிடுதல் கடமையாகும். மேலும் ''அல்ஹசனாத்'' ''உண்மை உதயம்'' குன்றின் குரல் வீரகே சரி போன்ற பத்திரிகைகளிலும் தனிப்பட்ட பிரசுரங்களிலும் என்கவிதைகள் வெளிவந்துள்ளன. பெரும்பாலும் இஸ்லாமியக் கருத்துக் கொண்ட பாக்களையே நான் எழுத விரும்பினேன். அவ்வாறு எழுதப்பட்ட என் கவிதைகளின் தொகுப்பொன்று ''பாலையில் வசந்தம்'' என்ற தலைப்பில் வெளியிட்டிருக் கின்றேன். ஏனைய கவிதைகளின் தொகுப்பே இந்நூலாகும்.

என் தந்தையாரே எனக்குக் குருவுமாவார். அவர் வழிச் சந்ததிகளான நாங்களும் அவரைப் பின் பற்றி எழுதுகின்றோம். யாப்பிலக்கணத்தை ஓரளவு அவர்களிடமிருந்தே கற்றுக் கொண்டேன். பள்ளிப் பருவத்தில் கவிஞர் ஜனாப் செய்யது ஹசன் மௌலானாவிடம் சில காலம் தமிழ் கற்க முடிந்தது.

என் மனைவியே என் முதல் இரசிகையுமாவார். நான் எழுதும் ஒவ்வொரு பாடலையும் முதன் முதலில் அவரிடமே படித்துக் காண்பிப்பேன். என்னை எழுத விட்டு எனக்கு எப்போதும் உதவிவருகின்றார். என் கவிதைகளுக்கு அவ்வப்போது சில நல்ல கருப் பொருட்களினை அவரிடமிருந்தே பெற்றிருக்கின்றேன்.

எழுதிய கவிதைகளைச் சேர்த்து வைத்திருந்தேன். என் அன்பு நண்பர் அட்டுலுகமவைச் சேர்ந்த ஜனாப் ஏ. எஸ். எம். புஹாரி ஆசிரியர் அவர்கள் அவற்றை நூலுருவாக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டதோடு அவற்றை வெவ்வேறு இரண்டு தொகுப்புகளாகத் தட்டச்சுப் பதித்தளித்தார். அவருக்கு நான் என்றும் கடமைப்பாடுடையவன். கையெழுத்துப் பிரதிகள் செய்துதந்த எனது மருமகன் நியாஸ் -ஏ. சமத் பொறியியலாளர் (சிவில்) அவர்கட்கும் சாற்று கவிகள் தந்த புகழ் மிக்க கவிஞர்களுக்கும் என் இதய பூர்வமான நன்றிகள் உரித்தாகும்.

அழகுற அட்டையை வரைந்துதவிய ஓவியர் ''ஸமீராஸ்'' அவர்களுக்கும் சிறப்பாக இந்நூலை பிரசுரஞ் செய்த மில்லத் அச்சகத்தாருக்கும் என் மனங்கனிந்த நன்றிகளைச் சமர்ப்பித்துக் கொள்கின்றேன்.

''தமிழகம்''
மருதமுனை.

அ. ஜின்னாஹ் ஷரிபுத்தீன்

# நூன்முகம்

இயற்கையி னழகை இளமையினை
 இன்பத் தமிழை யில்வாழ்வில்
நயக்க வுகந்த நற்பொருளை
 நாட்டி லன்று நடந்ததனை
செயற்றிற னலே யுலகுய்யச்
 செய்வோர் வாழ்வி னின்னல்களை
முயன்றேன் சொல்லக் கவிதையிலே
 முத்து நகையும் பிறந்ததுவே.

\+ + +

சிந்தா மணியிற் தினபதியில்
 சேர்ந்தே வாரத் தினகரனில்
வந்தவென் பாக்கள் தம்மோடு
 வாகா யின்னுஞ் சிலகூட்டி
தந்தேன் முத்து நகையாகத்
 தமிழ்த்தாய்க் கதனை யணிவித்தேன்
எந்தன் சிறிய முயற்சியினை
 ஏற்றுப் படித்து மகிழ்வீரே.

## காப்பு

நத்தினேன் முத்து நகைபாட நித்தியனே
சித்தஞ் சிறக்கத் துணைபுரிவாய்—நித்தம்
தடையின்றி நாவிற் றமிழூற வுந்தன்
கொடையருள்வா யுன்னருளே காப்பு.

# அவையடக்கம்

வானூர் பருந்தைக் கண்டதேன்
வண்டொன் றுயரப் பறப்பதென
ஞானம் மிகுந்த அறிஞரிடை
நான்கவி பாடப் போந்ததுவே.

# 1. நல்ல மனையாள்

1. அவளெழுந்தா லதுகண்டு வான்வெ ளுக்கும்
அரிவையவள் குரல்கேட்டே சேவல் கூவும்
பவனிவரப் பகலவனுங் கண்வி ழிப்பான்
பாவையவள் கடன்பாதி முடிந்த பின்னே
குவலயத்தோர் கண்ணயர்ந்து தூங்கும் வேளை
குறையனைத்தும் நிறைவுசெய்தே துயில்
வாள் இந்தப்
புவனமதி லிவள் போன்ருேர் மாது வாய்த்தால்
புண்ணியத்தின் நற்பலனும் உலகி ஞேரே

★ ★ ★

2. குறிப்பறிந்து செயற்படுவாள் கொழுநன்
சொல்லைக்
கொண்டிடுவாள் ஆணையெனக் குலந்த
ழைக்கப்
பொறுப்புடனே பாடுபட்டே யுழைப்பாள் நல்ல
புந்தியுள்ள மக்களுக்குத் தாயு மாவாள்
பொறுமையொடு வருமின்னல் அனைத்துந்
தாங்கிப்
போதுமெனும் மனநிறைவுங் கொள்வா
ளிந்தச்
சிறப்பனைத்தும் கொண்டவளை மனையாய்க்
கொள்ளல்
செகத்தினிலே பெரும் பேரும் உலகி ஞேரே

★ ★ ★

3. தினம்தெய்வந் தனைத்தொழுவாள் தெய்வ நீதி
தெளிந்ததுபோல் நல்வாழ்வைத் தொடர்
வாள் யார்க்கும்
மனமுவந்து கொடுத்துதவு வாளே யன்றி
மற்றவர்கள் உதவிதனை வேண்டி நில்லாள்
தனக்குரிய தெனிலதனைக் கொள்வாள் மற்றும்
தன்கடமை யறிந்துணர்ந்து செய்வாள்
போல
மனத்தினுக்கு இனியவொரு மனையாள் வாய்ப்
பின்
மானிலத்திற் பெரும்பேரும் உலகி னோரே

★ ★ ★

4. இல்லாத போதுமெலா மிருக்கும் போதும்
எள்ளளவுங் குணம்மாறு திருப்பாள் பொல்
லாத்
தொல்லைதுயர் வந்திடினுங் கணவ னோடு
துணைநின்றே அவைவெல்லுந் துணிவ
ளிப்பாள்
அல்லும்பக லயராதெம் இல்லம் வாழ
ஆனமட்டு முழைத்திடுவா ளவளைப்
போன்றோர்
நல்லமனை யாளமைந்தா லதுபோற் பேறு
நானிலத்தி லுண்டாமோ வுலகி னோரே?

''சிந்தாமணி''
-04-1985

———

## 2. இயற்கையின் மடியினிலே

. செங்கைக் கிரணமது மங்கி அழிந்திடுமுன்
அங்கங் குளிரவென விளமாதர்
திங்கட் குழவிநுதல் சங்குக் கழுத்தழகுத்
துங்கக் கயல்விழிகள் எழில்சேரப்
பொங்கிக் கரைதழுவி எங்கும் பரந்துவருங்
கங்கைப் புனலினிடை விளையாட
தங்கச் சிலைகள்பல ஒன்றிப் பனியருவி
தங்கிக் குலவிடுத லெனமானும்

★ ★ ★

வேறு

. நீலவிழி மாதரிள மேனிபுன லாழ்ந்து
மீளுகையி லேயவரி ளுடையுட லகலக்
கோலமுலை மேருவென வீறுகொண்டு விம்மக்
கொடியிடையார் கொங்கைகளின்
அரும்புகளி லாங்கே
வாலசைவில் வழிதிரும்பும் கயல்மீன்கள்பாய்ந்து
வருடவவர் உடல் சிலிர்க்கும் விழித்திரைகள்
மூடும்
கோலவெழில் உணர்வலைகள் கொண்டுடலங்
கொதிக்கக்
குளிர்நீரும் சுடமீன்கள் குதித்தோடக்
கண்டேன்

★ ★ ★

3. பூவிருந்து வீழ்ந்தமது புனலோடுவொன்றிப்
போதைதர மதிமயங்கிப் புரண்டுவிழும்
மீன்கள்
தாவியவை கவர்ந்துண்டு கரையேறும் புட்கள்
தானுமவை யுண்டதனுல் தடுமாறல்
கண்டேன்
ஆவினங்கள் நீருண்ணும் அதன்மடிகள் நீருள்
அமிழ்ந்ததனுல் அவற்றுள்ளும் அம்மதுநீர்
செறியும்
மேவியவை பற்றியிளங் கன்றுகளும் உண்ணும்
மதுகொண்ட பாலுண்டு போதைகொண்டு
துள்ளும்

★ ★ ★

மதுவுண்ணக் கருவண்டு மலர்மீது குந்த
மகரந்தத் துகளதனி னுடலெங்குஞ் சிந்த
புதுவண்ணங் கொண்டவைகள் பொன்போல
மின்ன
பொன்னளிகள் தன்னினமோ வென்றருகே
நண்ணும்
தத்தியது தாதுகொளத் தாவியிடம் பெயரத்
தங்கமுலாம் நீங்கியவை தன்கருமை
கொள்ளும்
மதுவுண்ட மலர்விட்டு மணங்கொண்டு மற்றோர்
மலரோடு கருவண்டு மருவிடுதல் கண்டேன்

— சிந்தாமணி
12-05-1985
''ஒலிமஞ்சரி''
இலங்கை வானெலி
06-02-88

# 3. சமத்துவம்

1. தானியங்கள் பயிரிடுவான் உழவன் கல்வி
தந்திடுவான் நல்லாசான் இதுபோற் பாரில்
தான்தனக்கென் றெவருமொரு தொழிலைச்
செய்து
தரணிதனிற் பிறந்தகடன் தீர்த்து வாழ
ஏன்கொள்வ ரோபகைமை யேற்றத் தாழ்வு
ஏழ்மைதனஞ் சாதியினம் எனும்பே தங்கள்
ஊனுடலி லோடுகின்ற குருதி யார்க்கும்
ஒருநிறமென் றறிந்தொன்றி வாழ்வ
தென்றே

★ ★ ★

2. சாதியினம் மதம்மொழியோ டவர வர்தம்
சரீரத்தின் நிறங்கொண்டும் பேதங்
கொள்வோர்
போதிநிழல் தன்னடியில் ஞானம் பெற்ற
புத்தபிரான் பொன்மொழியை மறக்க
லாமோ
ஆதியிறை முன்மாந்த ராய்ப் பிறந்தோர்
அனைவருமேஒரினந்தாணுண்பெண்ணன்றிச்
சாதியின மென்றென்றும் இல்லை பாரிற்
சமத்துவமாய் வாழ்கவெனப் போதித்தானே

★ ★ ★

3. இறையென்ப தொன்றேதான் மக்கள் தத்தம்
இச்சையினுக் குவந்தபடி தொழுவா ரந்த
இறைவனுக்கு வெவ்வேருய் நாமஞ் சூட்டி
ஏன்மனிதர் மதப்பூசல் செய்கின் ருரோ
கறையகற்றி யுள்ளமதைத் தூய்மை செய்து
கண்ணியமாய் வாழ்கவென்று மதங்கள்கூற
துறையறியா மடைமைகொண்டு மாந்த ரின்று
துன்புற்று வாழ்வதென்ப திழிவா மம்மா

★ ★ ★

4. அறிவினுக்கோ ரழிவென்ப தில்லை யன்பு
அனைவரையும் வெல்லுமொரு நல்ல பண்பு
வறியவருக் கிரங்கிடுமே நல்ல வுள்ளம்
வலுவில்லார் தமையடிமை கொள்ளல்
தாழ்வாம்
நெறிபிறழ்ந்து வாழ்ந்திடுங்கா லழிவே மிஞ்சும்
நெஞ்சறியத் தீமைசெயின் பாவம் விஞ்சும்
குறிதவறிப் போனசிலை போலில் லாநற்
கொள்கையொடு வாழ்வதொன்றே யுயர்வா
மம்மா

10-8-1978

———

# 4. தாய்க்குலப் பெருமை

1. தன்மனையாள் தனையடிமைப் படுத்த வெண்ணித்
தாய்க்குலத்தை அடிமையினம் எனநி
னைப்போர்
முன்னறொன்றை உணர்ந்திடுதல் நலமே யஃது
முளைத்ததெந்த நிலத்திலென அறிதலாகும்
அன்னையவள் அடிவயிற்றுள் அவள்வ ருந்த
ஐயிரண்டு திங்களிருந் தேபி றந்தோம்
''அன்னைபிதா முன்ன றிந்த தெய்வ மென்னும்''
அவ்வைமொழி தனைமறந்து வாழ லாமோ

★ ★ ★

2. பெற்றவளின் பொற்பாதத் தடியில் மைந்தன்
புகுஞ்சுவர்க்க முண்டென்றுர் நபிக ளுதர்
பெற்றவளும் பெண்ணன்றே உடன்பி றந்த
பெண்களோடு தன்மகளும் பெண்ணே
யன்றே
இற்றரையி லிவர்கள்தமை யடிமை கொள்ள
எண்ணுவரோ பெண்ணினத்தை அடிமை
யென்போர்
உற்றமனை யாளுடனே அன்றில் போலிங்
குவந்தொன்றி வாழ்தலன்றி உயர்வும்
உண்டோ

★ ★ ★

3. ''தாயைப்போ லேபிள்ளை'' என்பார் கற்ருேர்
தாய்க்குலத்தை அடிமையென்பான்
தன்னைப் பெற்ற
தாயையுமோர் அடிமையெனில் அவளும் ஈன்ற
தனையனிவன் ருனுமொரு அடிமை யன்ருே
தாய்க்குலத்தை இழிவுசெய்வோன் தனையி
றையோன்
தண்டிக்கா திருப்பானே விவை யுணர்ந்து
தாய்க்குலத்தின் பெருமைதனைத் தரணிக்
கோதித்
தானுமதைக் கடைப்பிடித்த லுயர்வா
மம்மா

5-01-1976

# 5. ஈழவள நாடு

1. சுற்றிவரக் கடலன்னை அணைப்பாள் அந்தச்
சுகத்தினிலே ஈழத்தாய் திளைப்பாள் மேனி
பெற்றெடுத்த நதிகளுடல் எங்கும் பாயப்
பெருமலைகள் தாங்கியவள் பெருமை
கொள்வாள்
நெற்றரையிற் பொன்விளையும் நிலத்தி னுள்ளே
நிறமணிகள் செறிந்திருக்கும் நித்தி லங்கள்
பொற்புடைய வாழ்கடலில் பொதிந்தி ருக்கும்
பூவுலகின் சுவர்க்கமெம தீழ மம்மா

★ ★ ★

2. உயர்ந்தமலை உச்சியிலே மேகக் கூட்டம்
ஊர்ந்துசெல ஆங்காங்கே ஊற்றெ டுத்துப்
புயங்கமென வளைந்தோடும் நதிகள் ஈழப்
பூமகளை நீராட்டிப் பூரிப் பெய்தும்
அயலிரண்டும் பெருவனங்கள் அழகு சேர்க்கும்
அங்குறையும் வண்டினங்கள் ராகு பாடும்
குயில்கூவிக் குரலெழுப்பும் குதிக்கும் மான்கள்
கோலவெழில் கொண்டதெங்கள் ஈழ மம்மா

★ ★ ★

3. தேனுகர்ந்து வண்டினங்க ளொன்றுய்க் கூடித்
திக்கெல்லாம் கானகத்தே யோங்கி நிற்கும்
வானுயர்ந்த மரங்களிலே வாகாய்த் தொங்கும்
வதைகளிலே சேர்த்துவைக்கும் அவைநி
றைந்து

தாஞகத் தரைநோக்கிக் கசிந்து வீழத்
தன்னிட்டம் போலதனை வான ரங்கள்
ஆனவரை யுண்டுடலிற் போதை யேறி
அசைந்தாடும் நிலைகாண்ப தழகா மம்மா

★ ★ ★

4. சிவபெருமான் திருப்பாதம் பட்ட தாலே
சிறப்புற்ற பருவதமொன் றுண்டாம் இங்கே
தவமெதுதான் செய்தனளோ ஈழ மாதா
தனதுடலில் தாங்குமுயர் பேறு
கொண்டாள்
சிவபக்தன் நீறிட்ட நுதலா மன்ன
சிறுமேகக் கூட்டமொன்று மலையின் மீது
தவழுவதைப் பொறுக்காத வாயு தேவன்
தன்திறமை கொண்டதனை யோட்டிட்
டானே

5. மண்ணடியில் மரகதநல் மாணிக் கங்கள்
மற்றெல்லா நவமணிகள் செறிந்து வெங்கும்
மண்செழிக்க மாதமும் மாரி பெய்யும்
மாவலியோ டின்னும்பல நதிக ளோடும்
பொன்விளையும் பூமிமணப் பொருட்க ளாலே
புவியெல்லாம் புகழ்கொண்டு பெருமை
கொள்ளும்
கண்ணென நாம் போற்றமற்றோர் வாழ்த்து
கின்ற
கலையழகு செறிந்த தெங்கள் ஈழ மம்மா
09.09-80

## 6. மாலைப் பொழுது

1. ஊர்சுற்றிப் பறவையினம் உணவு கொண்டு
ஒன்றிணைந்தே உறையுமிடஞ் சேருங் காலை
ஏர்பூட்டி வயலுழுது விளைத்துச் சோர்ந்தோர்
எருதோட்டி அவரவர்தம் இல்லஞ் சேர்ந்தார்
மார்தட்டிக் கங்குலொடு பொருதிக் காலை
மண்ணுலகை விட்டோடச் செய்த வெய்யோன்
கார்கூட்டி மீண்டுமவன் வருதல் கண்டே
கலங்கியொளிக் கரமொடுக்கிக் கடலிற் சேர்ந்தான்

* * *

2. புண்டரீகப் பூவமர்ந்து புதுத்தே னுண்டு
புந்தியழிந் தேமயங்கிச் சோர்ந்தி ருந்த
வண்டதுதன் உணர்வுறுமுன் அருணன் ஏக
வருந்தியுளந் தாளாது விதழ்கள் மூடிக்
கொண்டனவம் மலரிடையிற் பொதிந்த வண்டு
குற்றுயிராய்க் குரலெழுப்பும் நிலைமை கண்டு
தண்டலையில் அல்லிமலர்ந் தனவே யாங்கு
தாவிவிழுந் தேமகிழும் மீன்க ளம்மா

★ ★ ★

3. மாலையிள மஞ்சள்வெயில் மாறுகின்ற வேளை
மனமுவந்த மங்கையொடு மகிழ்ந்திருக்குங்
காலை
சோலையிளந் தென்றலுடல் மோதியிதஞ்
சேர்க்கும்
சுகமான வுணர்வலைகள் தோன்றி
யுளமீர்க்கும்
பால்நிலவின் தண்ணொளியில் பனிக்குளிரி
லென்றும்
படிக்காத புதுப்பாடம் படிக்கவுளந்
துடிக்கும்
காலைவரை தொடருமந்தக் கலையதனை
யெண்ணிக்
கற்பனைக்கு வுயிர்கொடுக்குங் காதலரைக்
கண்டேன்.

08-10-81

## 7. உச்சிமலைச் சாரலிலே

1 அலைதரை தள்ளிய நுரையெனப் பனிதரை
அளாவியே எங்கணுந் தோன்றும்
மலைவளர் தேயிலைத் தளிர்பரந் தழகிய
மலரென விரிந்துள மீர்க்கும்
சலசல வெனச்சிறு வோடையிற் புதுப்புனல்
சப்தித்து வின்னிசை பாடும்
நிலமிசை இயற்கை நின்றர சோச்சிடும்
நிகரிலா அழகினைக் கண்டேன்

★ ★ ★

2. முற்றிடாப் பசுந்தளிர் மும்மூன் றெனவே
முறுக்கியே விரலிடை சேர்த்துப்
பற்றியே முதுகினில் தொங்கிடு கூடையுட்
பக்குவ மாகவொன் ருக்கிச்
சிற்றிடை சுமையாள் ஒடிந்திடும் எனவோர்
செவ்வித ழாள்மலை மீதே
சற்றுடல் பக்கஞ் சரித்தும் நிமிர்த்தியுஞ்
சதிர்நடம் புரிந்திடக் கண்டேன்

★ ★ ★

3. பெய்திடு பனியினுற் காலையவ் வேளையில்
பெண்ணுடல் நனைத்திட நடுங்க
கொய்திடு தளிரினைக் கூடையுள் வீசிடத்
கொங்கைகள் அதிர்ந்துமே குலுங்க

பொய்யெனும் இடைவளைத் தேயவர்
குனிந்தெழும்
போதிலு மசைந்திடும் போதும்
ஐயகோ எனக்குடல் அனைத்திலும் விழியேன்
இறைபடைத் திலையென நொந்தேன்.

10-04-76

## 8. புவியாளும் வல்லோன்

1. பகலினிலே பகலவனை யுதவச் செய்து
பாரிருளைப் போக்கியதன் ஒளிக வர்ந்து
அகல்விளக்காய் அமுதமெனும் ஒளியைச் சிந்தி
அகங்களினைக் குளிரச்செய் மதிப டைத்து
தகதகவென் றொளிருமுயர் மணிக ளன்ன
தாரகைகள் பலகோடி விண்ணிற் றாவி
வகையாகத் தன்வழியே யவைகள் செல்ல
வான்வெளியில் வழியமைத்த வல்லோன் யாரோ?

★ ★ ★

2. வானிருந்து மழைபொழியச் செய்து புன்செய்
வான்நோக்கும் நிலங்குளிரச் செய்து நீல
வானுயர்ந்த மலைகளிலே ஊற்றெ டுத்து
வயல்களினை நீராட்டிப் பரந்தே ஓடும்
தேனருவி பல நூற்றை யுலக மெல்லாம்
திட்டமிட்டுப்படைத்தவற்றுள் நீந்தியோடும்
மீனினங்கள் சேர்த்துலகப் படகை யோட்டும்
மீகாமன் மாபெரிய வல்லோன் யாரோ?

★ ★ ★

3. புல்பூண்டு மரஞ்செடிகள் கொடிக ளெங்கும்
பூத்துமணம் பரப்புகின்ற மலர்கள் மக்கள்
நல்லுணவென் றுண்டுமகிழ்ந் திருக்க வென்று
நற்றுனி யம்பலவும் வகைவ கையாய்

அல்லலுறு பிணிபோக்கும் மாம ருந்தாய்
அவன்படைத்த தாவரங்கள் அகில மெங்கும்
சொல்லியடங் காதவிவை அனைத்தும் தந்து
செகங்காக்கும் மாபெரிய வல்லோன்
யாரோ?

★ ★ ★

4. பூவிருந்து தானுயர்ந்த தேனைத் தந்தான்
புசிக்குமுண வாகவுயர் மருந்தாய்ச் செய்
தான்
பூவிருந்து விதம்விதமாய்த் தானி யங்கள்
புறப்படுத்தித் தன்திறனைப் புரியச்
செய்தான்
பூவிலுயிர் வாழுகின்ற வுயிர்க ளுக்காய்ப்
போதியவா றனைத்தையுமே படைத்தா
னந்தப்
பூவிலியாய் ஆனவொரு தனியோ னேயிப்
பூவுலகை யாளுகின்ற வல்லோ னமே

பூவிலி:பெறப்படாதவன். ''சிந்தாமணி''
11-10-87

# 9. குலத்தளவு தானே குணம்

1. பற்பலநூல் கற்ருலும் பாரம் பரியகுணம்
அற்றறுந்து போகா தசில்மாரு-சர்ப்பம்
நிலத்தினிலே வாழுவது நீரினிலே வாழா
குலத்தளவு தானே குணம்

ஃ

2. நற்குடியின் மாந்தர் நலிந்தாலும் வாழ்நாளில்
துற்செயலைக் கொண்டுயர்வு தேடாரே-முற்றும்
இழந்தாலும் வஞ்சனையாற் கொள்ளாரே
யாக்கை
அழிந்தாலும் தீங்குநினை யார்

ஃ

3. புல்லுண்ணு ரென்பர் பசித்தாற் புலியதுபோல்
இல்லை யெனினு மிரந்துண்ணுர்-நல்ல
குடிப்பிறந்தோர் தாழ்ந்தாலும் கொள்கையிலா
மாந்தர்
படியேறிப் போகார் பணிந்து

ஃ

4. பரம்பரையாய் பண்புகளும் பற்றித் தொடரும்
குருதியொடு சேர்ந்தூறிப் போகும்-வருந்தி
மறைத்தாலும் சூழ்நிலையால் வந்தினத்தைக்
காட்டும்
மறுத்தாலும் உண்மை யிது.

ஃ

5. பாத்திரத்தி லுள்ளதுதான் தேறுமது போற்கற்ற
சாத்திரத்திற் கேற்ப அறிவாகும்-கோத்திரத்திற்
கேற்றபடி கொள்கை குணமதனு லோர்ந்தே
தான்
போற்றும் உலகு புரிந்து.

ஃ

சிந்தாமணி
05-10-1986

# 10. இன்னும் வரக் காணேன்

1. தலைவனவன் வருவனென எண்ணிச் சாலைத்
தலைப்பினிலே தலைவியவள் காத்தாள்
செம்பொற்
சிலையொன்றை வடித்தெவனோ வைத்தாற்
போன்று
சிந்தனையி லாழ்ந்திருந்தாள் கண்டு தோழி
மலையிடிந்து போனதுவோ தேவி யுந்தன்
மன்னனவன் வருவான்நீ கலங்காய்
உன்றன்
வலையினிலே பிடியுண்ட கள்வன் செய்கை
வார்த்தைகளால் செப்பிடுவாய் மகிழ்வோம்
என்றாள்

★ ★ ★

2. கரியவிருள் கவிகின்ற கருக்கல் வேளை
காதலனின் வரவெண்ணிக் காத்தே நிற்கும்
திருமகளோ விமைப்பிழந்து நின்றாள் கண்கள்
தேடுமவன் மறைந்திடுவா னெனப்ப
யந்தாள்
வருவனென வார்த்தைகளிற் றேன்க லந்து
வாயாரப் பொய்யொன்றே சொல்லி
யென்னை
மருவியவன் சென்றானென் றெண்ணித் தானே
மனங்குமைந்து நிற்கின்றாள் பாவம்
அந்தோ

* * *

3. செங்கனியென் வாய்சிவக்கத் தோழி முத்தஞ்
சேர்த்தணைத்துப் பன்னூறு ஈந்தான் என்னை
அங்கமங்க மாகவவன் அனுப வித்தான்
அத்தனைக்கும் அவனோடு இசைந்து
நின்றேன்
திங்களொளி இங்கிதமாய் இருந்த தெங்கள்
திருவினைக்குத் குளிர்த்தென்றல் சாட்சி
கூறும்
எங்குமுடல் சிலிர்க்கிறதே தோழி யந்த
இன்பநிலைக் கிவ்வுலகி லீடு முண்டோ

* * *

4. சொன்ன சொல்லைத் தவருனென் தலைவன்
எந்தன்
துணைக்கின்றும் வருவானென் துயரந்
தீர்ப்பான்
சின்னவிடை யணைத்தின்பஞ் சேர்ப்பான்
மேலாஞ்
சுவர்க்கமதற் கவனுடனே இணைந்து
செல்வேன்
மன்னனவன் மன்மதனே மறுக்கா தென்னை
மலர்மஞ்ச மாக்கியவன் வேட்கை தீர்ப்பேன்
இன்னுமவன் வரவில்லை யேனோ தோழீ
இனியுமென்னல் பொறுத்திடவு மியலா
தந்தோ

* * *

5. அங்கைகள் செங்கைக ளாக நெஞ்சை
அணைக்கவிரு பங்கையங்கள் கனக்க
வுள்ளம்
பொங்கிவரு வுணர்வலையாற் துள்ள மேனி
புதுப்புதிய வனுபவங்கள் காண ஏங்கும்
சங்கமித்த உடலிரண்டும் ஒன்றிச் செய்யும்
சயனசல் லாபமிவை கண்டு நாணி
கங்குலழிந் தேயகன்று வோட வானிற்
கதிரவனும் தோன்றிடநான் கலங்கிப்
போனேன்.

09-11-1986
சிந்தாமணி

———

# 11. ஒன்றுபட்டு வாழ்வோம்

1. இலங்கைத்தாய் பெற்றெடுத்த மக்கள் எல்லாம்
இனபேதம் மறந்தொன்ருய் வாழ
வேண்டும்
புலங்கொள்ள வேண்டும்நாம் பிறந்த மண்ணின்
புகழொடுங்கா தநுகாத்துப் பூவ ரங்கில்
துலங்கிடவுஞ் செய்திடுதல் வேண்டும் மக்கள்
தூயமனங் கொண்டடொன்றி வாழ
வேண்டும்
விலங்கறுத்துச் சுதந்திரமாய் வாழச் செய்த
வீரரென்று வாழ்ந்ததனே மறக்க லாமோ

* * *

2. சாதிமத குலபேதக் குரோதங் கொள்ளல்
சான்ரேருக் கடுக்காது சீல மைந்தே
போதிமர நிழலடியில் ஞானம் பெற்ற
புத்தபக வானுரைத்த வழிக ளாகும்
பேதமிலா தெம்மத மும் இவ்வா றேதான்
போதனைகள் செய்யவவை பற்றி நாமும்
நீதிவழி சென்ரென்ருய் நேசத் தோடே
நீடூழி வாழ்ந்துய்ய வேண்டும் மாதே

* * *

3. எல்லாமே யுண்டெங்கள் ஈழ நாட்டில்
ஏனமைதி ஒன்றுமட்டும் இல்லை இன்று
பொல்லாத மனக்குரோதம் வந்த தாலே
புனிதமண்ணில் செந்நீருஞ் சிந்து
தையோ
எல்லோரும் ஒன்றுபட்டு வாழ்ந்தார் முன்னோர்
ஏனிந்தப் பகைமையெலாம் எமக்குள்
ளாமோ
நல்லவர்க ளொன்றுபட்டே அமைதி காத்து
நாடுய்யப் பாடுபட வேண்டும் மாதோ.

தினகரன்
12-4-87

---

# 12. அழகிய ஆணினம்

1. ஆணின மேதா னழகென்றால்
ஆதங்க மேனே அரிவையர்க்கு
மானினிற் கலையும் மயிலினத்தில்
மனத்தைக் கவர்வதும் ஆணினமே
நானிலத் திறைவன் படைப்பினிலே
நல்லெழில் கொண்டதும் ஆணினமே
ஏனிதை மறந்தே அவன்படைப்பை
ஏளனஞ் செய்யத் துணிந்தாரோ

*   *   *

2. கூனற் பிறையை மான்விழியைக்
குவளை மலரைத் தாமரையை
வான்கரு முகிலை மின்னலினை
வனிதையர் தமக்கே உவமித்த
தேன்புல வர்கள் எனவாய்ந்தால்
எல்லாம் அவரவர் ஆசைகளை
தேனே மானே யெனவி ழித்துத்
திருப்தி கொள்ளுந் தந்திரமே

*   *   *

3, குழலழ கெனிலதிற் பூவெதற்கு
குறுநகை யழகெனில் நகையெதற்கு
விழியது வேலெனில் மையெதற்கு
வில்லெனிற் புருவம் மிகையெதற்கு

செழுமை பெண்டிர்க் குரிமை யெனில்
செய்யும் மிகைதனின் பொருளென்ன
அழகெனி லழகுக் கழகு செய்யும்
அறிவிலி யுலகினிற் பெண்ணுமோ

* * *

4. பெண்ணழ கெனவெப் பெண்புலவர்
பிரியம் வைத்துப் பாடினரோ
பெண்ணழ கென்று பிதற்றுவது
பித்தமடித்தால் ஆண்க ளன்றோ
பெண்ணழ கென்றவ ருடலாசை
பிரிந்துடல் சோர்ந்தாற் பாடுவரோ
பெண்ணின மிதுதனை யுணராத
பேதைய ரென்றிடிற் பிழையாமோ

* * *

வேறு:

5. கரியதிரு மானினவ தாரச் செம்மல்
கார் முகிலின் வண்ணனவன் அயோத்தி
மைந்தன்
அரியதிரு அழகதனைக் கூறிக் கம்பன்
ஐயோயிவன் அழகென்றும் அழியா
தென்றான்
கரிமுகனின் இளையவனின் அழகைக் கூறும்
கவிகளவன் அழகினிலே கலங்கிப் போனார்
புரியாதோ இவர்களெலாம் ஆண்கள் தானே
புவிபோற்றும் அழகரெனிற் பொய்ய தாமோ

* * *

21-05-75

# 13. அன்பு மகனே

1. அன்புமக னேயுனக்குத் தந்தை கூறும்
அறிவுரைகள் சிலவதனைச் செவிமடுப்பாய்
முன்பெமது முன்னோர்கள் சொல்லி வைத்த
முதுமொழிகள் தாமவற்றை முறையாய்க்
கேள்மின்
என்கடமை நானவற்றை ஏவி வைப்ப
தேற்று நட கண்மணியே யுந்தன் வாழ்வில்
இன்பமன்றித் துன்பமுனை அணுகா தெய்வம்
என்றுமுனைக் காத்திட நீ நன்றே வாழ்வாய்

* * *

2. யாருக்குந் தீங்கிழைக்க வெண்ணி டாதே
இயன்றவரை யுதவு மனப் பான்மை
கொள்ளு
தூரவில கெவரேனும் உனக்குத் தீங்கு
செய்யவிழைந் தால்முடிந்தால் அன்பால்
வெல்லு
நேருக்கு நேர்நின்று சத்தியத்தை
நிலைநாட்டத் தயங்காதே துணிவு
கொள்வாய்
போரென்று வந்திடுங்கால் புறங்கொள் ளாதே
புந்திபுயப் பலங்களினால் வாகைகொள்வாய்

* * *

3. கற்றதுகை மண்ணளவே அறிவாய் வாழ்வில்
கண்டதுகல் பண்டிதனுய் ஆவாய் உன்னே
வித்தகனென் றுலகேற்க வேண்டு மாகில்
விரும்பிப் பல நூல்களேயுங் கற்றுத்
தேர்வாய்
இத்தரையி லிணையில்லாச் செல்வங் கல்வி
யொன்றேதா னெனுமுண்மை மறந்தி
டாதே
சித்தமிவை கொள்மகனே சிறந்த நல்ல
செகம் போற்றும் அறிஞனென மிளிரு
வாயே

* * *

4. ஊரோடின் ஒன்றித்து நீயும் ஓடு
உனக்குமட்டுந் தனிவழியைத் தேடி டாதே
யாரோடும் பகைகொள்ள வேண்டாம் உன்னே
எவர்பகைக்கு மாறும்நீ நடந்தி டாதே
கார்குழலார் சொல்வதனே நம்பி டாதே
கண்ணியஞ்செய் யவருரிமை மறுத்திடாதே
நேர்மைதவ ருதெதையுஞ் செய்வாய் யார்க்கும்
நீதியொன்றே எனுமுண்மை நினேவிற்
கொள்வாய்

* * *

5. பெற்றதாய் தாதையுடன் பெரியோர் கல்வி
போதித்த குருமார்கள் தனேம திப்பாய்
உற்றசுற்றத் தோடிணேந்து வாழு மற்றோர்
உவக்கவுந்தன் நாவடக்கிப் பேசு வுன்னேக்

கற்றவரும் மற்றவருங் கவரும் வண்ணம்
கனிவாகப் பழகுனக்கு மூத்த பேர்கள்
சொற்கேட்டு வழிதொடர்ந்தே ஏற்றங்
காண்பாய்
சோம்பலினை நீக்கிவிடு சொர்ணங் காலம்

* * *

6. கோபத்தை யடக்குன்னை யதுவிஞ் சுங்கால்
கொடுமைபல விளையுமுடன் பழிதான்
மிஞ்சும்
சாபமிட்டு யெவரையுமே வையா தேநீ
சாபத்துக் குந்தனையு மாக்கி டாதே
பாவத்திற் கஞ்சதனைச் செய்வோர் பக்கம்
பார்க்காதே நீயதனைப் பழகல் கூடும்
தூபமிட்டுப் பகைமைதனை வளர்த்தி டாதே
துணைநின்றே ஒற்றுமையை ஓங்கச்
செய்வாய்
7. செய்வதனைத் திருந்தச்செய் செய்த பின்னே
சேர்ந்ததவ றெண்ணியுளம் வருந்தி
டாதே
செய்யுமுன்பு சிறுபொழுது சிந்திப் பாயேல்
சிறிதேனும் தவறிழைக்க மாட்டாய் இந்த
வையமுந்தன் அறிவுரைக்கு வழிபட் டேகும்
வளமான காலம்வரும் அவ்வப் போது
துய்ய நல்ல வழிமுறைகள் செப்பு வாயேல்
துலங்குமுந்தன் புகழ்மலைமேற் றீபம்
போன்றே

சிந்தாமணி
08-03-87

# 14. மலைநகர்ப் பூம்பொழில்

1. முகைவெடித் தரும்புகள் முறுவலித் திடுமதில்
முத்தெனப் பனிபடிந் தொளிரும்
வகைவகை யாகவே வண்ண நல் மலரினம்
வண்டினத் தோடுடல் கூடும்
புகையெனப் பரவிடு முகில்மலர்ச் செடிகளுட்
புகுந்தெழில் வண்ணமுங் காட்டும்
மிகையழ கெங்கணும் செறிந்தே விளங்கும்
மலை நகர்ப் பூம்பொழில் கண்டேன்

* * *

2. அழகிய அம்மலர் வனத்திடை ஓரிள
அழகியோ டிணைந்தொரு காளை
பழகிட வந்தனன் பருவங்கள் சேர்ந்தன
பார்த்திட அங்காரும் இல்லை
எழிலுறு சூழலும் இதமான வேளையும்
இயற்கையின் நல்விருந் தாகி
சுழலுமிவ் வையத் திருவருந் தானெனச்
சுகங்காண விளைந்தனர் மாதோ

* * *

3. சீதளம் மிகுந்துடல் சிலிர்த்திடக் கரங்கள்
சேர்த்துடல் பற்ற நெருங்கும்
போதுளங் கிளர்ந்தே புதுப்புது வுணர்வினுல்
புளகாங் கிதமது கொள்ளும்

மாதுளம் அறிந்திளங் காளையும் மலர்வன
மறைவிடம் நோக்கிட அவளும்
தோதது தானெனத் துணிந்தன ளேயவள்
தொடர்ந்தவன் பின்நடை பயின்றான்

* * *

4. பிடியிடை மாதிளங் காளையின் உடலொடு
பின்னியே நடந்தனள் ஆங்கே
கொடிகளுஞ் செடியுடல் கோர்த்தே வளர்ந்தன
கோதையின் செயலை கண்டே
மடிந்தவை நெளிந்தன நாணமும் மேலிட
மலரெலாம் உதிர்ந்தவை கூடி
கடிகமழ் பூம்பொழில் தனிலொரு மஞ்சம்
காதலர்க் கமைந்தன மாதோ

* * *

5. பூவிரி மஞ்சம் பொன்னுடல் தாங்கும்
பொங்கிடும் உணர்வுகள் ஓங்கும்
நீவிய குழல்கலைந் தேமுகி லோவென
நிலவெனும் முகத்தினை மூடும்
தாவியே அவற்றைக் கோதிடு விரல்கள்
தடையின்றி யுடலெங்கும் ஓடும்
நாவினில் ஊறிடும் அமுதமும் அவர்க்கு
நல்விருந் தானது மாதோ

28-12-79

* * *

## 15. இடப் பொருத்தம்

1. மண்ணடியில் மறைந்திருந்தால் மாணிக் கத்தின்
மதிப்பதனை யாரறிவார் பட்டை தீட்டி
வண்ணமயிற் பெண்ணொருத்திக் கணிவித்
தாலோ
விலைகொள்ளத் தானியலு மாமோ ஆழி
வெண்முத்துக் கரைசேர்ந்து மாலை யாகி
வெண்சங்குக் கழுத்தொன்றில் இலங்கு
மாயின்
கண்ணிரண்டும் போதாதே கவர்ச்சி காணக்
காலமெல்லாம் அதனழகு குன்று தன்றே

*     *     *

2. புடமிட்டாற் றன்மின்னும் பொன்னுஞ் செய்த
பொன்னணியைப் பெண்ணணியப்
பொலிவுங் கொள்ளும்
திடமான கரும்பொன்னை யுலையி லிட்டுத்
தேவைதனக் கேற்றபொரு ளாக்க லாமே
அடவிமரக் கொம்பர்களைத் தேன்வ தைகள்
அலங்கரிப்பின் பயனுண்டோ அவைக
வர்ந்தே
உடலத்துக் குணவாக மருந்து மாக
உவந்தேற்க நன்மைபல உண்டா மன்றே

*     *     *

3. நாகத்தின் மணிமுடியில் இருந்தாற் கொள்ள
நரனுக்குப் பலமேது நாகந் தீண்டின்
நாகவிடம் உயிர்பறிக்கும் நலமே அந்த
நாகமதைத் தூய்தாக்கி மருந்தாய் மாற்றின்
நாகத்தின் தந்தமுத்தாற் பயனே தந்த
நாகத்திற் கவைதமையோர் அணியிற்
சேர்த்து
நாகுவய தாளொருத்தி நகையாய்ப் பூணின்
நாகெருத் தின்னுமழ காகு மன்றே

* * *

4. இருக்குமிடத் திருப்பதனல் சிலவுந் தத்தம்
இடம்மாறி ஞற்சிலவும் செயற்கையாக
மெருகேறி யுருமாறிப் போவ தாலே
உயர்ச்சி பெறும் பெருமைகொள்ளும்
இதுபோல் வாழ்வில்
பொருத்தமெவ ரெவ்விடத்துக் கெனவே
யோர்ந்து
பெற்ருலே பதலிக்கும் தாங்கு வோர்க்கும்
உரியபுகழ் வெற்றியிவை கிட்டும் என்று
உணருங்கால் போட்டிபகை குறையு
மன்ரே.

நாகம்: நாக பாம்பு, விஷம், யானை
நாகு: இளமை, சங்கு
எருத்து: கழுத்து

20-03-78

# 16. பெண்ணுரிமை

1. அரிவையரால் ஆகாதே ஆண்கள் செய்யும்
அத்தனையும் எனவுரைக்கும் ஆண்கள் அந்த
அரிவையரால் ஆகுவன அனைத்துஞ் செய்யும்
ஆற்றலவர்க் குண்டாமோ அறிவுள் ளோரே
உரியவிடம் மாதருக்கும் ஆண்கள் போல
உரியரிடம் வேண்டுமென வேண்டி
நின்றால்
சரியாகா ததுபெண்கள் தாழ்ந்தோ ரென்று
சாற்றுவதில் நீதியுண்டோ கூறு வீரே

★ ★ ★

2. பெண்கள்தமை அலங்கரித்துப் பேய்கள் போல
பெண்மையழிந் தலைகின்றார் என்னும்
பேர்கள்
ஆண்களின்று செய்கின்ற அலங்கா ரங்கள்
அறியாதோ பேசுகின்றார் உரைப்பில் இன்று
சாண்சிகை தோள் வரைவழிந்து சரிந்து
தொங்கச்
சட்டையெல்லாம் பற்பலவுஞ் செய்தே
இன்னும்
பூணுகிறார் ஆபரணங் கைக முத்தில்
புதுமையிவை என்பதெலாம் புதுமை
யாமோ

3. போட்டியிட்டே ஆண்களொடு கல்வி-தன்னில்
புகழோடு வாழுபவ ரெத்த னைபேர்
நாட்டினையும் ஆண்டுவின்றும் ஆளுகின்ற
நாரியரை யேன்மறந்தா ரின்னு மின்னும்
ஏட்டிலடங் காதபெருந் தொகையாம் பெண்கள்
எத்தொழிலுஞ் செய்யவுளந் துணிந்தா ரின்று
வீட்டினிலே யடக்கிவைத்த காலம் மாறி
விடுதலைபெற்று ழைக்கின்று ரறிகி லாரோ

தினகரன்

———

# 17. இணையில்லா இல்லாள்

1. வல்லவனு யாயிடினும் வழிவ ராத
வனிதையவள் துணையானல் வாழ்வில்
என்றும்
சொல்லவொணு வேதனை தான் மிஞ்சும் எல்லாச்
சுகமிருந்தும் பயனற்றுப் போகும் வாழ்வில்
அல்லும்பகல் அவனலைந்து தேடிச் செல்வம்
ஆனமட்டுஞ் சேர்ந்தாலும் அகப்பை தூக்கும்
இல்லாள்சிக் கனமாக இல்லா விட்டால்
என்னமிஞ்சும் செல்வத்திற் கூருய் மானே

★ ★ ★

2. நல்லவனுய்ப் பதிவாய்த்தால் நயந்து வாழ்வில்
நற்பயனைப் பெறவேண்டும் விதிவ சத்தால்
பொல்லானின் சதியானல் பொறுமை யோடு
புரிந்தவனின் வழிமாற்றிப் புதுமை
செய்வாய்
கல்லாத ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டால்
கருத்தறிந்தது வழிநடத்திக் செல்வாய்
செய்கை
எல்லாமே நல்லதெனச் கொண்டோ ரிங்கே
எவருமிலை யறிந்ததுபோல் நடப்பாய் மானே

★ ★ ★

3. கல்லெனிலும் புல்லெனினும் கணவன் என்றே
காலத்தை யோட்டியநம் முன்னோர் போல
தொல்லையெலாந் தாங்கியின்றும் வாழ்க என்று
துணிந்துரைக்க மனமொப்ப வில்லை ஆனல்
கல்லாகப் புல்லாக எண்ணு துந்தன்
கணவனை நீ கண்ணியஞ்செய் அதுவே
போதும்
சொல்லாலுஞ் செயலாலும் பார்வை யாலும்
சுட்டெரிக்கா துளமொன்றி வாழ்வாய் மானே

★ ★ ★

4. கற்பென்ருல் கண்ணகியை நினைவில் காண்பாய்
காதலுக்கு ஜானகியே கணவன் போற்றும்
நற்பண்புக் கிலக்கணமாம் வாசு கித்தாய்
நாமறிந்த நனிபோற்றும் நாய கிகள்
விற்புருவத் தாளேநா னென்று சொல்வேன்
வேண்டும்நீ முன்சொன்ன அனைவர்
போன்றும்
பற்றியவர் வழியொற்றி நடந்தா யானல்
பாரிலுனக் கிணையில்லை யறிவாய் மானே

சிந்தாமணி
15-02-87

## 18. கண்மணி மகளே

கண்மணி மகளே கண்மணி மகளே
மண்ணில் நீமிக மதிப்பொடு வாழ
நீதிநல் நெறிமுறை நேர்மை எதுவெனத்
தாதைநா னுரைக்கும் அறிவுரை கேட்பாய்

வளரும் பயிர்நீ வாழ்வில் கொள்ளும்
வழிவகை யறிந்தால் வாழ்க்கையு மெளிதே
புதுக்கரம் நீட்டிப் பொன்னொளி பரப்பிப்
பண்ணொடு குயிலினம் பாடிடு வேளை
கண்விழித் துந்தன் கரும மியற்று

காலை வணக்கம் கடமை யதுபோல்
கால மறிந்து கடவுளைத் துதிசெய்
பள்ளிப் பருவம் பயனுடைத் ததுவுன்
உள்ளந் திருந்த ஒப்பிலாப் போழ்தாம்

பற்பல கற்கப் படிபோ லமையும்
பொற்புறு காலம் புந்தியுந் துலங்கும்
சித்தம் ஒன்றிச் சீரிய கல்வி
பெற்றிடு நீயுயர் பதவிகள் பெறுவாய்

அகம்பா வத்தை அடியொடு வெறுப்பாய்
முகம்மலர்ந் தெவர்க்கும் முகமன் கூறு
அன்பைப் பண்பை அணியாய்க் கொள்நீ
துன்பம் அணுகா துணைஇறை மகளே
ஒழுக்கம் தனைநீ யுயிரெனப் பேணு

அழுக்கா ரென்றும் அகத்தினிற் கொள்ளேல்
யாசிப் பவரை நேசித் திருப்பாய்
கூடிப் பிறரின் குறைபே சாதே
வேடிக் கைகள் விநோதம் தவிர்ப்பாய்
ஆடவ ரோடு அண்டிப் பழகேல்
மூடக் கொள்கையை முன்னின் றெதிர்ப்பாய்

அவதூ றெதற்கும் அஞ்சி யொதுங்கு
தவறெனக் காண்பதைத் தட்டிக் கழிப்பாய்
தனிவழிப் பயணந் தவிர்த்திடு கண்ணே
தனைவிடப் பாரிழி வெனநினை யாதே
அன்னை யுரைக்கும் அறிவுரை கேட்பாய்

உன்னுடன் சிறுரோ டொன்றிப் பழகு
உகந்தவை மட்டும் உவந்திடு மகளே
பகைவரின் ஒதுங்கும் பக்குவம் வேண்டும்
அலங்கா ரங்கள் அளவறிந் தேசெய்
நலந்தரா தெனிலதை நாடுதல் தீதே
அதனிலு மியற்கை யழகே யுயர்வாம்
புதுமலர் ஒருபொழு தோடழிந் திடுமே.

புன்னகை பூத்த முகத்தின ளாயிறு
பொன்னகை தனிலும் புன்னகை சிறப்பாம்
பிறர்முன் பெருநகை செய்யா திருப்பாய்
உறும்பழி யெனநீ ஓர்ந்திட வேண்டும்

இடமறிந் தெதையும் இயம்பிடு உந்தன்
உடன்பிறந் தாரோ டொன்றிநீ வாழு

தன்னிலும் அவர்தன தாகுமென் றெண்ணி
அன்னவ ருக்குநா ஞற்றிய வறவுரை
போற்றிடு நீயும் புரிந்தே
பெற்ருேர் தமக்கும் புகழ்வர வாழ்கவே.

01-11-74

----

## 19. இன்ப வாழ்வு

1. இன்பமடா வாழ்வெல்லாம் எண்ணிப் பார் நீ
ஏன்படர வேண்டுமுளஞ் சோகக் கோடு
துன்பமென வெண்ணிடுங்கால் தோல்வி தானே
துணிந்தெதிர்த்தால் மறுபாதி சுகமே கேளு
அன்னையிட மமுதுண்ட கால மின்பம்
அடியெடுத்து வைக்கையிலோ பிறிதோ
ரின்பம்
தன்வயதுச் சிட்டுகளோ டோடி யாடித்
திரிகையிலே கண்டதெல்லாம் வெவ்வே
றின்பம்

★ ★ ★

2. கன்னியெனக் காளையென வளர்ந்து-கொள்ளும்
காதலிலே ஊடல்பின் கூடல் இன்பம்
பின்னுமின்பஞ் சதிபதியா யான போழ்து
பிள்ளைசுற்ற மென்ருனல் பிறிதோ ரின்பம்
பொன்குஞ்சு மழலைமொழி பேசக் கேட்டுப்
பெற்றவர்க ளடைவதெல்லை யற்ற இன்பம்
தன்செல்வம் பள்ளிசெல்லக் காண்ப தின்பம்
தடைதாண்டி வெல்லுமவ ருயர்வா லின்பம்

★ ★ ★

3. கண்போன்ற மகளுக்குக் கணவ னாகக்
கற்றறிந்த வழகன்வரக் கொள்ளை யின்பம்
பெண்ணுக்குப் பேரனென்று பிறந்திட் டாலோ
பேரின்பம் பேரின்பம் அவனைத் தூக்கி
கண்காது முகங்கழுத்து கன்ன மெல்லாம்
கணக்கற்று முத்தங்கள் ஈதல் இன்பம்
சின்னவிரல் கைகோத்து மெல்ல மெல்லச்
சிறுவனைப்பின் தொடரப்பின் தொடரு
மின்பம்

4. எல்லாமே இன்பமடா வாழ்க்கை யுள்ளம்
எஃகியபஞ் சொற்றஃது விருந்திட் டாலே
சொல்லாம லோடிவிடுந் துயரம் வாழ்வில்
சேர்வதெல்லா மின்பமய மாகு மன்றிப்
பொல்லாத கரியமனங் கொண்ட பேர்க்குப்
பின்தொடரும் பெருந்துன்பம் வாழ்வி
லென்றும்
நல்லோர்க்குத் துன்பங்கள் விளைத்தால் மாறி
நாடியவன் பக்கமவை சாரு மாமே

15-10-1987

----

## 20. சோதனைக் கஞ்சேல்

1 சோதனைகள் யார்க்கும் பொதுவே துணிவுடையோர்
சாதனைகள் செய்யக் கருவாகும்—சோதனைக்
கஞ்சியுளம் சோரா ரதை வெல்லும் நாள்வரையும்
துஞ்சா ரறிவுடையோர் தாம்.

2. வந்த விடரால் துயர்கொள்ள வேண்டாங்காண்
எந்த விடரெனினு மேற்றதனை-சிந்தை
உரங்கொண்டு வெல்க வதனினிலுந் தீது
வருமுன்னே காப்ப துயர்வு.

3. கோடின முள்ளவர்க்குங் கோடி பிரச்சினைகள்
தேடி வரலவரே தானறிவார்-கோடி
கொடுத்தாலுந் தீரா குலத்திழிவுஞ் சேர்க்கும்
அடுத்தவர்க்குஞ் சொல்லா ரவை.

உள்ளத் தூய்மை

4. உள்ளத்திற்தூய்மையுடையோர் பிறர்க்கென்றும்
எள்ளத் தனையேனும் தீதெண்ணார்-வெள்ளை
மனங்கொண்டு பிள்ளைகளைப் போலா மவரை
இனங்கொண்ப தென்று மெளிது.

மாசுடை நெஞ்சம்

5. மறைக்க முயன்றாலும் மாசுடை செயநெஞ்சம்
மறையாது சொல் லிற் தோன்றும்-கறைசிறிது
வெண்துகிலிற் பட்டு விளங்குவபோல் வஞ்சகரின்
கண்ணிரண்டுங் காட்டும் உளம்.

பழி

6. செய்யாத தப்பினுக்காய்ச் சேர்த்வபழி
யோர் நாளில்
பொய்யாகிப் போகும் அறிவாய் நீ-வையகத்தே
நல்லவர்க்குச் சோதனைகள் நாற்றிசையும்
வந்திடினும்
நில்லா தகன்று விடும்.

நீதிவழி

7. சோதனைக ளெத்தனை தான் சேரந்திடிலும் மாருது
நீதிவழி சென்றிடுக நிச்சயமாய்-ஆதியிறை
நல்வழியிற் செல்பவர்க்கே நாளடைவில்
வாதை கொள்ளும்
நல்லருனைத் நந்தருளு வான்

காலம்

8. காலத்தா லாகுமெனக் கைசோர்ந் திருப்பவர்கள்
ஞாலத்தில் வாழுந் தகையற்ருேர்-காலத்தைப்
பொன்போல போற்றும் புகழுடையார் தானிந்த
மண்ணில் சிறந்த மகன்.

----

# 21. விடிவைக் காண்போம்

1. கந்தலெங்க ளுடைமானங் காக்கும் போர்வை
கையளவு தான் நாங்கள் வாழும் இல்லம்
சொந்தம்மிக எங்களுக்குப் பஞ்சம் நோய்கள்
சேர்ந்துடலோ டொன்றிவிட்ட துணைகள் மிக்க
பந்தமொடு தொடர்ந்துவுடல் வாட்டு கின்ற
பட்டினியும் பசிப்பிணியுங் கால மெல்லாம்
வந்துறுவ தன்றிவே றென்ன கண்டோம்
வகையற்ற வாழ்விதற்கு விடிவும் உண்டோ

★ ★ ★

2. முயற்சியிலே குறையொன்று மில்லை நாட்கள்
முழுவதுமே உழைக்கின்றோம் உழைத்தே ஓய்ந்த
அயற்சியரு உறங்கிடிலும் அழைப்பொ லிக்க
அதிகாலை மீண்டெழுந்தெம் பணிக்காய்ச் செல்வோம்
உயர்ச்சியென்ப தில்லையெங்கள் வாழ்வில்யாரும்
உணர்ந்ததனைப் பார்ப்பதில்லை ஓர்ந்தா லென்றும்
துயர்ச்சுமைதான் எங்களுக்குச் சொந்த மென்று
தொடருமெங்கள் வாழ்வினுக்கு விடிவும் உண்டோ

★ ★ ★

3. காலையிலே எழுந்தெங்கள் கடமைக் கேகக்
கடுங்குளிரால் உடல்நடுங்கிக் குறுகிப் போக
மாலைவரை மனந்தளரா தொன்று சேர்ந்து
மலையேறித் தேயிலையின் தளிர்ப றித்து
ஆலையிலே சேர்த்ததன்பின் தானே யெங்கள்
அகப்பணிகள் ஒவ்வொன்ருய் நிறைவு
செய்வோம்
பாலைநிலம் போலெங்கள் வரண்ட வாழ்வு
பசுமைபெறுங் காலமென்று வருமோ
சொல்வீர்

★ ★ ★

4, பற்றைத்தளிர் பனிநீரிற் குளித்து நிற்கும்
பசுமைமிகு வனப்பெங்குங் கொஞ்சுஞ் சாரல்
சுற்றிவரத் தோன்றுமெங்கள் முயற்சி யாலே
சுகிப்பததன் பலனைச்சில ரெங்கள் வாழ்வோ
வற்ருத சுனையிடையே வேர றுந்து
வாடுகின்ற பங்கயத்தைப் போலாம் இந்த
தொற்றும்பிணி தொடர்ந்தெங்கள் சந்த திக்குந்
தொடராது வழிகாண விழைவா ருண்டோ

★ ★ ★

5. நாட்டினது வருமானம் எங்கள் கையில்
நாடறியும் நாமறியா திருப்ப தேனோ
தோட்டத்துக் கூலிகளென் றெம்மை மற்ருேர்
தூற்றவிட மேன்கொடுக்க வேண்டும்
நம்மால்

ஈட்டுகின்ற பெரும் பொருளைக் கொண்டு தானே
இங்குள்ளோர் வாழுகிறுர் எமைப்பு கழ்ந்து
ஏட்டினிலே எழுதிவிட்டாற் போதா தெங்கள்
இன்னலிடர் அகலவுல குதவ வேண்டும்.

★ ★ ★

6. பெற்றெடுத்த செல்வங்கள் படிக்கப் பள்ளி
பிறருக்குப் போலெங்கும் வேண்டும் ஆங்கே
முற்றும்புது வசதியொடு கல்வி ஞானம்
முறையாகப் பயிலவழி செய்தல் வேண்டும்
கற்றறிந்த திறமைமிக்க உபாத்தி யாயர்
கற்பிக்க வேண்டுமதன் பலனாய் வாழ்வு
பொற்புறுதல் வேண்டுமெங்கள் புத்திரர்கள்
புவிபோற்றும் மனிதர்களாய் மாற வேண்டும்

★ ★ ★

7. கல்வியொன்று தானெம்மை யுயர்த்தும்
வாழ்வின்
கடை நிலையில் இருந்தெம்மைத் தூக்கும்
ஒன்றும்
இல்லையென்ற நிலைமாறி வாழ வைக்கும்
எவருக்குஞ் சிரந்தாழ்த்தா திருக்கச்
செய்யும்
எல்லையில்லா எமது மனச் சுமைக ளெல்லாம்
இரவிகண்ட பனிபோல மறைந்து போகும்
புல்நுனியின் துளிநீருக் கொத்த வாழ்வு
புறங்காணப் புதுவாழ்வு பொலியுந் தானே

★ ★ ★

8. தலைதாழ்த்தி வாழ்வதினி யில்லை யெங்கள்
தலைவனுக்கே பிறரெவர்க்கும் பணிவ
தில்லை
நிலையாக வாழவெமக் குரிமை யுண்டு
நிர்க்கதியாய் வாழ்ந்தநிலை மாறிற் றின்று
இலையெவரு மிலங்கைக்கு வுரிமை கோர
எல்லோரும் வந்தவரின் பரம்ப ரைதான்
மலை நாட்டின் மன்னவர்கள் நாமென் றெண்ணி
மனந்துணிந்து மானத்தோ டிங்கு
வாழ்வோம்

★ ★ ★

9. நமக்கென்றோர் வாழ்வுண்டு யுரிமை யுண்டு
நம்கடமை யென்றென்றும் உண்டு
மற்றோர்
தமக்கென்றே வாழ்ந்தவொரு காலம் மாறித்
தத்தமக்கு மாகவின்று வுழைக்க வேண்டும்
சமமாகப் பிறரோடிந் நாட்டில் வாழும்
சமூகமெனு முரிமைதனை மதிக்க வேண்டும்
எமதுயிரா யிந்நட்டை யெண்ணி நாளும்
இயன்றவரை பாடுபட வேண்டும் மாதோ

★ ★ ★

10. இன்றெமக்கும் இந்நாடே தாய்நா டென்னும்
எண்ணமெம துள்ளத்தி லூன்ற வேண்டும்
ஒன்றுபட்டு வாழுமுயர் உணர்வு வேண்டும்
ஒருவருக்கும் அஞ்சாத உறுதி வேண்டும்
சென்றழிந்த துயர் நிறைந்த வாழ்வை
யெண்ணி
சிந்தித்தே செயல்படவும் வேண்டும்
அஃதை

பின்னரெங்கள் சந்ததியர் கண்டு தாமும்
பின்பற்றித் தொடர்கின்ற வழியைக்
-காண்போம்

1987ல் ''மலையக கலை இலக்கியப் பேரவை', யின் 'குன்றின் குரல்' பத்திரிகையால் அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட கவிதைப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கவிதை.

''குன்றின் குரல்''
நவம்பர் 1987

# 22. உழைக்கும் உயர்ந்தோர்

1. ஊனழிந்து வுடல்நலிந்து வுருக்குலைந்த வாழ்வினை
ஏன்தொடர வேண்டுமினி எண்ணிச்சற்றுப்
பாரடா
கான்திருத்தி கழனிசெய்து காசினிக்கு வுணவினை
காலமெலாங் கொடுக்கும் நாங்கள்
கஷ்டமுற வேண்டுமோ
தான்தனக்கு வென்று பொருள் சேர்ப்பவர்க
ளுழைப்பவன்
தமக்குரிய பங்கதனைத் தரமறுத்தல்
நேர்மையோ
ஏனினியும் இன்னிலைமை இருக்கவிடங்
கொடுப்பதோ
இன்றிருந்தே நீதிதனை எடுத்தியம்பத்
துணிந்துவா

* * *

2. இடும்முதலுக் கேயனைத்தும் என்னும் நிலை
மாறியே
இரண்டிலொன்று வுழைப்பவர்க்கு
வென்றுநீதி பிறக்கணும்
அடிமையென வாழ்ந்த நிலை யற்றறுந்து
நாமெலாம்
அனைவரும்போ லனைத்தும்பெற்று
வகமகிழ்ந்தே இருக்கணும்

குடைபிடித்து வரப்பினிலே நடைபயிலும்
போடிமார்
குரல்தணிந்தெம் இல்லம் நாடிக்
குழைந்துவரச் செய்யணும்
பாடும்படும் நம்மைநம்பித் தானுலகு
விருப்பதைப்
பாரறியச் செய்யுமுந்தன் பணிதொடர
வேண்டுமே

*  *  *

3. உச்சிவெயி லுடலுருக்க வுதிரம்வியர்வை யாகிட
உழைக்கு மெங்கள் உழைப்பிற்சிலர்
உயர்ந்துவாழ வன்னவர்
எச்சிலுக்காய் ஏங்கிநாங்கள் ஏனிரக்க
வேண்டுமோ
இரங்குவோருக் கிணங்கிமற்ற ஈனர்களைச்
சாடுவோம்
குச்சிலில்ல வாழ்வுதலை குனிந்தநிலை மாறியே
கொள்கையுள்ள மனிதராகிக் கொடுமைகளை
யெதிர்த்துநாம்
அச்சமற்றுத் தலைநிமிர்ந்து வனீதிகளை
வென்றுவிவ்
வவனிதனில் முதல்மையெமக்
கென்றுணரச் செய்குவோம்

26-08-78

## 23. ஏமாற்றம்

இரவுபக லென்றுழைத்தேன் எதனைக் கண்டேன்
எனக்கென்று நானெதனைச் சேர்த்து
வைத்தேன்
மருவிவரும் எவருக்கும் மனங்கோ ணது
மனமுவந்து நானளித்தேன் மகிழ்வுங்
கொண்டேன்
வரவுதனை யறிவேன் நான் வருவோர்க் கெல்லாம்
வழங்கியவை தானறியேன் செய்த
தெல்லாம்
அரவமதற் கிட்டவமு தாகிற் றென்றே
அறிந்தின்று மனங்குமைந்து வாழு
கின்றேன்

* * *

எட்டாத கொம்பீதென் றிருந்த பேர்க்கும்
ஏணியென நானானேன் என்மே லேறி
எட்டாத கொம்பினையும் எட்டிப் பின்னே
எனையுதைத்துப் புரட்டவுளங் கொண்டா
ரந்தோ
தொட்டதெல்லாம் பொன்னாகிப் போன போது
துணையாக இறைக்கடுத்து நின்ற என்னை
சட்டைவிட்டு நகருகின்ற நச்சுப் பாம்பாய்ச்
சணத்தினிலே மறந்ததிவர் ஏனோ வம்மா

* * *

3. நண்பரென வெனைநாடி வந்தே யென்ஞல்
நலம்பெற்ரேர் எத்தனைபே ரின்று வென்னைப்
பண்பின்றிப் பழிச்சொல்லால் பலபேர் முன்னே
பற்பலவுஞ் சொல்லவுள ந் துணிந்தா ரந்தோ
உண்டவுண வுதிரத்தோ டொன்று முன்னே
உணவளித்தோன் றனைவையு முலுத்த
ருண்டோ
தண்புனலென் றெண்ணிச்சுடு நீரை
யுண்டேன்
தவிக்கின்றேன் தகவில்லா ருடனும்
வாழ்ந்தேன்

02-06-78

# 24. திருமகன் வந்தான்

கலித்துறை

மதியே முகமுடல் மலராம் மென்மை யழகுருவே
நிதியே யெந்த னுயிரிலு மினிய நிறைபொருளே
புதியோ யுலகிற் கருளாய் வந்தநற் புகழுருவே
விதியே யெனவென் னகட்டி லுதித்தாய்
திருமகனே

மலடே யெனவுல கிகழா தெனக்கு மகவாகி
நலமே நாஞெரு தாயென வெண்ணியே
மகிழநிதம்
பலமே யெமக்கொரு வாண்மக னுண்டென்
றெமதுவுயர்
குலமே பெருமை கொள்ள பிறந்தனே திருமகனே

ஏழு சுரங்களிலெழுங்குர லோசைமெ மன்நரம்பின்
யாழொடு வேய்குழல் நாதமும்மழலைத்
தேன்மொழிக்கு
கீழென நானுணர்ந் தேனது வுன்குர
லொலிகேட்டே
வாழுவ திப்புவி நானுனக் கன்றோ திருமகனே.

கண்ணே யெந்தன் விழிகளினரிய கருமணியே
பொன்னே யழகொடு விலையில் லுயர்நல்
மாமணியே
விண்ணெ டுலகு மொளிர வுதவுங் குளிர்நிலவே
மண்ணே யுனதடி பணியு மோர் நாள் திருமகனே

சிந்தாமணி 21-06-87
பாவளம் இலங்கை வானொலி12-11-87

## 25. செந்தமிழ் காப்போம்

1. பாரெல்லாந் தமிழொலிக்க வேண்டும் மற்றோர்
பற்றுடனே எம்மொழியைப் பயில வேண்டும்
ஊரூராய் மன்றங்க ளமைத்தே எங்கள்
உயிரனைய மொழிவளரச் செய்தல் வேண்டும்
யாராலும் அழிக்கமுடி யாத வாறே
எம்மொழியை யெம்மவர்கள் கற்றல்
வேண்டும்
சீரான மனங்கொண்டு பற்றுங் கொண்டு
செந்தமிழை யுலகாளச் செய்தல் வேண்டும்

* * *

2. அமிழ்தினிலும் இனியதுசெந் தமிழ்போல் இந்த
அவனிதனில் ஓர்மொழியும் உண்ட தாமோ
தமதுவுயிர் உடல் பொருளைத் தமிழுக் காகத்
தந்திடவுந் துணிந்தவெங்கள் முன்னோர்
போன்று
எமதுவுயி ருடல் பொருள்கள் அழிந்திட் டாலும்
எமதன்னை மொழிவாழச் செய்தல் வேண்டும்
நமதுகடன் தமிழரெனப் பிறந்த தாலே
நன்றென்றே யுணர்ந்துபணி தொடர்தல்
வேண்டும்

* * *

2. இயலிசையோ டின்பத்தமிழ் நாட கங்கள்
இணைந்தொன்ற யிவ்வுலகை ஈர்க்க
வேண்டும்
குயிலோசை யோடுதமிழ் கூட்டி யெங்கள்
குலமாதர் பாடவுல காட வேண்டும்
அயர்வின்றி மனச்சுமைகள் மாறி மக்கள்
அழகுதமிழ் நாடகத்தி லொன்ற வேண்டும்
செயலெல்லாந் தமிழ்கலந்தே யிருக்க வேண்டும்
செந்தமிழின் மணமெங்குங் கமழ வேண்டும்

16-10-80

---

* * *

## 26. மரபுவழி தொடர்வோம்

1. இலகுதமிழ் கொண்டுகவி மரபு மாரு
   தெழுதிவழி காட்டியவர் இன்றி ருந்தால்
இலக்கணத்தைக் கற்றறியும் ஆசை அற்று
   இடர்பட்டுத் தமிழ்செய்வோர் நிலைமை
      கண்டு
நலமாமோ நாம்செய்த தன்று முன்னோர்
   நடைமாற்றிப் புதுமையெனச் செய்த
      தெல்லாம்
பலமற்று நலிந்துதமிழ் அழிந்து போகப்
   பாதைசமைத் திட்டோமென் றெண்ணு
      வாரே

*   *   *

2. அன்றுபெரும் புலவர்கள் தந்த செல்வம்
   அறிந்துபொருள் கொள்ளவின்று வெவரு
      மில்லை
என்றநிலை மாறிடத்தான் வேண்டும் நாங்கள்
   இலக்கணத்தைக் கற்றிடுதல் வேண்டும்
      நாளை
ஒன்றேனும் விளங்காத நிலைமை தோன்றி
   ஒப்பில்லாக் காப்பியங்கள் மறைந்து
      போயின்
தொன்றுதொட்டு வந்ததமிழ்ப் புகழ ழிந்து
   துயருற்று வருந்துநிலை வாராது போமோ

*   *   *

3. செந்தமிழைக் கற்றறிதல் வேண்டும் யாப்பின்
சிறப்பறிந்து பொருள்கூட்டிப் பாட
வேண்டும்
சந்தங்கள் பொருந்தச்சீர் தளைகளின்னும்
சார்ந்துவரு மெதுகையொடு மோனையாவும்
வந்தொழுங்கு மாருது விருக்க வேண்டும்
வகைவகையாய்த் தமிழ்க்கவிதை புனைய
வேண்டும்
முந்தியெங்கள் புலவர்கள் செய்து வைத்த
முந்தமிழி னடியொற்றிச் செல்லு வாமே.

20-10-80

---

# 27. துள்ளிவரும் மெல்லியலாள்

1. சேடியோடு கூடியொருசேயிழையாள்பூவனத்தில்
ஆடிமகிழ்ந் தேயிருந்தா ளன்னவளின்-ஈடில்லா
மெய்யழகைக் கண்டு மனம்மகிழுங் கூறிடவோ
வையகத்தி லில்லை மொழி.

2. வெண்பிஞ்சுச் சோள விதையெடுத்துச்
செவ்வரத்தை
வண்ண வதரச் சிமிழுள்ளே-எண்ணி
அடுக்கிவைத்த தொக்குமவள் பல்வரிசை மின்னி
விடுக்கும் நகைக்கே திணை

மார்பிற் சிவந்தகனி மாதுளைகள் தாங்கவதன்
சுடர் முனைகள் தாமரையின் கூம்பாக
கார்குழலின்
தோகையவை மூடத் துணைசெய்யும் மீறியவை
நாகப் படம்போல் நகும்.

4. பட்டுடுத்த பின்னழகுப் பெட்டகத்தின்
மென்னசைவில்
கட்டிவைத்த கார்குழலின் பூவுதிரும்-ஒட்டியதில்
தேனுகர்ந்த வண்டதிர்ந்தே யோடுமவள்
நீலவிழி
கண்டேபின் மீண்டே வரும்.

5. பாதக் கொலுசுகளின் பண்ணிசைக்குக்
கைவளையின்
நாதம் பொருந்தி நகைசெய்யும்-தோதாக
மேகலையுஞ் சேர்ந்தொலிக்கும் மெல்லியலாள்
-துள்ளிவர
ஆகுமிசைக் கோலமெழி லே.

10-12-87
'பாவளம்' இலங்கைவானொலி'
26-07-1987
சிந்தாமணி

---

## 28. நல்லவராய் வாழ்வோம்

புகைப்பதனுல் போதையுணர் வேறுந் தேகம்
புகைகொண்ட விடத்தாலே நலிந்து போகும்
பகையாகும் உடலுக்கே அபினி யுண்டால்
படிப்படியாய் உண்டவனை உண்டே
தீர்க்கும்
வகை வகையாய் இரத்தத்தில் ஊசி மூலம்
வார்க்கின்ற நஞ்சுகளால் வாழ்நாள்குன்றும்
இகவாழ்வில் இத்துன்பம் அடைந்தே ஈற்றில்
இறந்தபின்னும் எரிநரகில் வீழ நேரும்

★ ★ ★

கள்ளுண்ட வெறிசற்றுக் கூடிப் போனுல்
கட்டுண்ணு தறிவுகுறி தவறிப் போகும்
எள்ளளவுந் தனதுவுயிர் மானந் தன்னை
எண்ணுது விழிகருமஞ் செய்யத் தூண்டும்
உள்ளதெலாம் அழிந்தொழிந்தே போகுந்
தத்தம்
உற்றசுற்றம் வெறுத்தொதுக்கும் உவந்து
வாழ்ந்த
பிள்ளைகுட்டி கூடப்பெருஞ் சுமையாய் எண்ணும்
பீடையிவ னென்றுலகம் இகழுந் தானே.

* * *

3. முறைகேட்டுப் புணர்வாலே மானி டர்க்கு
முடுகுகின்ற பெருநோய்க ளுடலை வாட்டிக்
குறையாக வாழ்வுதனை முடிக்குந் தத்தம்
குடும்பத்திற் சந்ததிக்குந் தொடரச் செய்யும்
நிறைவானமருத்துவத்தாற் குணங்கண் டாலும்
நேர்ந்திட்ட விகற்பங்கள் தங்கி நிற்கும்
கறைகொண்ட இவ்விழிய செயல்த விர்த்தே
கற்புள்ள மானிடராய் வாழு வோமே

05-04-1986

## 29. கஷ்டம் விலகிவிடும்

1. நாளைமட்டும் என்னவிந்த நாளும் நமதே
நம்பிக்கையுந்துணிவுமெங்கள் ஆயு தங்களே
வேளைவரு மென்றிருந்தால் காலம் வீணடா
வெற்றியென்னு மிலக்கைநோக்கி வேக
மாய் நட
காளையர்கள் செல்லும்பாதை கடின மாயினும்
கருத்திற்றூய்மை கொண்டுழைத்தால்
கஷ்டம் விலகுமே
ஆளையாளை நம்பிவாழ்ந்த காலம் மாறணும்
அனைவருமே யுழைத்துவிந்த உலகை
யாளுவோம்

* * *

2. வாழ்க்கையதன் கீழ்கோட்டில் வாழும் மாந்தரை
வையகத்திற் தலைநிமிர்ந்து வாழச்
செய்குவோம்
ஏழ்மையெனுங் கொடுமைதனை இலாது
போக்கவே
இயன்றவரை இல்லாதோர்க் குதவி
வாழுவோம்
தாள்பணிந்து வாழ்ந்தநிலை மாறிப் போனதே
தாழ்வுயர்வு வென்னும்பேதம் தனையொ
துக்குவோம்

ஊழ்வினையென்றுடல்வளைத்து வாழு வோர்தமை
உணர்ச்சியுள்ள மாந்தர்களாய் மாற்று
வோமடா

*　　*　　*

3. வாக்கினிலே உறுதிசொன்ன வார்த்தையும் மாரு
வாழுவதெம் கடமையென வாழ்ந்து
காட்டடா
நோக்கமெலாம் எழுச்சியின்பால் இருக்க
வேண்டுமே
நெறிபிறழாக் கொள்கையொடு முயற்சியும்
வேண்டும்
ஊக்கமுழைப் பினுக்குவென்றும் உறுதுணை
யாகும்
ஒற்றுமையும் வேண்டுமுளத் துணிவதும்
வேண்டும்
காக்கவிரு கைகளொடு கடவுள் ஆசியும்
கண்ணியமும் இருக்கையிலே கவலை
யேனடா

''சிந்தாமணி''
15-11-87

## 30. அன்புள்ள தங்கைக்கு

1. புருஷனே டில்ல றத்திற்
புகுந்தவென் னுடன்பி றப்பே
உரிமையோ டுனக்குன் னண்ணன்
உரைப்பதைச் செவிம டுப்பாய்
திருமண வாழ்வை நன்கு
தெரிந்துணர்ந் தறிந்து வாழ்ந்தால்
தருமமா மதுசி றந்த
தவத்திலு முயர்ந்த தாமே.

* * *

2. எக்காலும் பதிக்கு கந்த
இணையிலா மனையா ளாக
பக்குவத் தோடு வாழ்ந்து
பண்பினி லுயர்ந்தே நின்று
தக்கநல் மனையா ளெங்கள்
தனயனுக் கென்றே யுந்தன்
புக்ககத் தாரும் போற்றப்
புகழொடு வாழு வாயே.

★ ★ ★

3. கணவனின் சொல்லை மிஞ்சிக்
கடுகள வேனுஞ் செல்லா
திணங்கியே நடப்பா யானல்
இன்பமே சேரும் வாழ்வில்
பிணக்குகள் தோன்று துந்தன்
பிறந்தகப் புகழு மோங்கும்
வணங்குவா யிறையை யென்றும்
வாழ்வெலாம் இன்பந் தானே.

4. இயைறவ னுனக்கு வெண்ணீர்
இணையிலாச் செல்வந் தன்னைக்
குறைவிலா தருள வேண்டும்
குலந்தழைத் தோங்க வேண்டும்
உறைபதிச் சுற்றத் தாரும்
உவக்கநீ வாழ வேண்டும்
நிறைவுற வனைத்தும் பெற்று
நீடொன்றி வாழு வாயே.

சிந்தாமணி
28-2-88

---

# 31. அளித்தழியாப் புகழ்கொண்டோர்

1. கோடிகோடி மனிதர்கள் பிறந்தே இந்தக்
குவலயத்தில் வாழ்ந்மடிந்து தேகி விட்டார்
தேடிலதி லாயிரத்தி லொன் றி ரண்டே
திவ்வியபுகழ் கொண்டின்றும் வாழுகின்ருர்
கோடிகோடிப் பணமிருந்து மென்ன அள்ளிக்
கொடுப்பவரே யுலகுள்ள மட்டும் வாழ்வார்
தேடுமவர் புகழன்று மின்று மென்றும்
தெய்வத்தி னருளாலே நிலேத்தே நிற்கும்

* ★ *

2. போர்க்களத்தி லிரந்துநின்ற கண்ண னுக்குப்
பேரரசன் வள்ளலுயர் கர்ண னன்று
பாரறியச் சென்னீரைத் தாரை வார்த்துப்
புகழ்கொண்டான்இன்றுமவன்வாழுகின்ருன்
ஓர்சிறிய புருவினுயிர் காக்கத் தன்னி
னுடலிலதன் நிறைக்குநிறை மாமிசத்தை
சாரட்டும் வேடனுக்கே யென்ற ளித்த
சிவிச்சக்க ரவர்த்தி வாழு வானே.

* * *

3. நற்றமிழின் நாயகியாம் ஔவை நீடு
நானிலத்தில் வாழ்ந்துதமிழ் காக்க வென்றே
கொற்றவனா மதிகமா னவர்க்கு நெல்லிக்
கனியளித்துப் புகழ்கொண்டா னென்றும் வாழ்வான்
பற்றியாங்கே படரவொரு கொம்பில் லாது
படிந்திருந்த முல்லேக்குப் பாரி வள்ளல்
உற்றதுணை யாகத்தன் தேரை யீந்தான்
உலகென்று மவன்செய்கை மறக்கு மாமோ

4. இத்தரையில் வாழுமட்டும் இரப்போ ருக்கு
எல்லையற்ற பெருஞ்செல்வந் தன்னை யீந்து
செத்தபின்னுங் கொடைகொடுத்த சீதக் காதி
செகம்போற்றும் புகழுடம்போ அழிய
மாட்டா
உத்தமநன் நபிபுகழைக் கூறுஞ் சீரு
உமர்பாடப் பொருளீந்து புகழுங்
கொண்டார்
சத்தியமாய்ச் சடையப்ப வள்ள லாருஞ்
சரித்திரத்தி லழியாத புகழ்கொண் டோரே.

★ ★ ★

10-04-1973
சிந்தாமணி

## 32. அறிவுடையோரே வருக!

1. கூலிக்கு மாரடிக்குங் கூட்டஞ் சேர்ந்தால்
கொள்கையிலாப் பேர்களுமே தலைவ ராவர்
வாலுக்குந் தலைகனத்துப் போகும் பையில்
வகையிருந்தால் ஒமலிக்கும் முதலி டந்தான்
காலூண்ட ஆளுண்டு கைப்பொன் னுண்டேல்
கைகட்டி வாய்புதைத்தே ஏவல் செய்து
வாலாட்டி நிற்பவர்கள் வகையி ழந்தால்
வந்தவழி சொல்லாமல் நழுவு வாரே

* * *

2. ஏடறியான் வார்த்தைகளும் அம்ப லத்தில்
ஏற்புடைய தாகுமவன் செல்வ னுல்
நாடொன்றிப் போற்றுமவன் நாடு கின்ற
நல்லவையுங் கெட்டவையுஞ் செயல்க
ளாகும்
தேடுமவன் தேட்டங்கள் தீய மூலத்
திருந்தேதான் வருவதென அறிந்திட்
டாலும்
கூடவிருந் தவனெச்சில் உண்ணுங் கூட்டம்
குறைமறைக்கப் பாடுபடும் வாழ்த்திப்
போற்றும்

* * *

3. இழிவான இந் நிலைமை மாற வேண்டும்
எழுத்தறிந்தோன் தனையுலகம் மதிக்க
வேண்டும்
அழிவிருந்தே யிவ்வுலகைக் காக்க வல்ல
அறிவுடையோ ரவைமுதல்மை ஏற்க
வேண்டும்
வழிநடத்திக் கற்றோர்கள் முன்னே செல்ல
வழிதொடர வேண்டும்நாம் வகைய றிந்தே
பழியற்ற வாழ்வுமுறை காட்டிச் செல்லும்
படித்துணந்தோர் தமைப்போற்றி வாழு
வோமே

21-2-88
சிந்தாமணி

* * *

## 33. பாலையில் வசந்தம்

1. நீண்டநெடு மணற்பரப்பு நெடுவா னைக்கும்
நிமிர்ந்துநிற்கும் மணற்குன்றம் மார்பிற் கச்சுப்
பூண்டவிள மேனியெனத் தோன்றும் ஆங்கே
புற்பூண்டே தோன்ருச்செம் பெருவெம்பாலை
தீண்டவிய லாநெருப்பாய்த் தகிக்கும் மண்ணிற்
தோன்றுகின்ற கானல்நீர் விழியை யேய்க்கும்
நீண்டநெடுங் கழுத்தலங்கு வாழு வோர்க்கு
நெடும்பயண வாகனமாய் உதவு மாமே

* * *

2. உருகிடுமோ உடலமென அஞ்சும் உள்ளம்
உலையிலிட்ட கரும்பொன்னய்த் தகிக்கும் மேனி
சிரசுயரப் பகலவனும் ஓர்சாண் உள்ளே
செங்கதிரைப் பாய்ச்சுவது போலத் தோன்றும்
பெருகுமுடல் வியர்வைவெளித் தோன்ரு தாகம்
பேராழி தனைநொடியி லுறுஞ்ச எண்ணும்
கருமேகங் கனிந்தங்கு பொழிவ தெல்லாங்
காணவிய லாதவொரு காட்சி யாமே

* * *

3. கற்கண்டுப் பாகோடு தேனுங் கூட்டிக்
கனிந்தனவோ செங்கனிகள் பேரீந் தாக
உற்றபசி போக்குமுய ருணவாய் மாந்தர்
உவந்துண்ணக் காய்த்தனவோ பாலை
மண்ணில்
வற்ருத அணைகளிலே நீரைத் தேக்கி
வந்துகளை யாறிடுவோர்க் கமுத மூட்டும்
அற்புதமே பசுந்தரைக ளிடையி டையே
ஆண்டவனின் பெருங்கொடையா மகிலத்
தோர்க்கே

25-10:82

★ ★ ★

# 34. அருள் முகில் நீ

1. நீவாத கார்குழல் போலெஃகி வானில்
நீர்மொண்டு தாவுகின்ற முகிலே நீபோய்
சோவென்றே வயல்நிலத்திற் சொரியா தெங்கே
சுற்றுகிருய் ஆழ்கடலிற் பொழிவ தற்கோ
தாவென்றே இரப்போர்க்குத் தாரா துள்ளோர்
தமக்கள்ளிக் கொடுப்போர்கள் மனந்தி ருந்த
தேவைய றிந் தேபொழிந்தே காட்டு வாய்நற்
தருமமெது வென்றவர்க்கே உணர்த்து
வாயே

★ ★ ★

2. தனமுடையோர் செய்யும்நற் ருனத் தாலே
தாழ்வுநிலை மாறிவழி இல்லா தோர்கள்
புனல்கண்டு செழிக்கின்ற நிலம்போல் வாழ்வில்
புத்துணர்வு பெறுவாரே அறிகி லாயோ
மனமுவந்தே அளிக்கின்ற நல்லோர் போன்றெம்
மாதமுமே மும்மாரி பொழிதல் வேண்டும்
தினமேங்கிப் புனல் வேண்டித் தவிக்கும்
மண்ணின்
தேவையுணர்ந் தேபொழிய வேண்டும் நீயே

* * *

3. காயாது கழனியெல்லாம் நீர்நி றைந்தே
கருவுற்ற செந்நெல்லிற் குணவு மாகி
ஓயாத வறுமையினுல் வாடு வோரின்
உற்றபசிக் குணவளிக்க விளைய வென்றே
நீயாக மனமிரங்கி நீரைத் தேடி
நிலங்குளிரச் செய்யாயோ நன்றி யோடு
வாயார உனையுலகு வாழ்த்துந் தெய்வ
வரம்பெற்று வந்துலகின் துயரந் தீர்ப்பாய்

* * *

**சிந்தாமணி**
**10-01-88**

## 35. முல்லைக் காட்சிகள்

1. வான்நோக்கி வளர்ந்தமரக் கொம்பர் மீது
வதைவதையாய்த் தேனீக்கள் கூடு கட்டித்
தேன்சேர்க்கும் அவைதனுக்குத் தோதாய்
எங்குந்
தித்திக்கும் மதுதேக்கி மலர்கள் பூக்கும்
கானெங்கும் மலர்மணத்தாற் சுகந்தம் வீசும்
கனிவகைகள் கனிந்தெங்குந் தொங்கும்
அஃது
வானரங்கள் பாய்ந்துமரந் தாவ வீழ்ந்து
வனமெல்லாங் கனிகளெனக் காணு மாமே

★ ★ ★

2. காரிருளி லாழ்ந்துறங்குங் கான கத்தே
கதிரவன் தன்ஒளிக்கதிரைச் சரம்போற்
பாய்ச்ச
பேருருவக் கரிமுதலா முயிர்கள் வேருய்ப்
புறப்பட்டுத் தத்தமது வுணவைத் தேடும்
நீரருவி மெல்லவசைந் தோடும் பக்க
நிலங்களுக்கு நன்நீரைப் பகிர்ந்த ளிக்கும்
கரைகளிலே விலங்கினங்கள் தாகந் தீர்க்கும்
காணுமிவை யழகுமுல்லைக் காட்சி யாமே.

★ ★ ★

3. கண்டகண்ட இடமெல்லாம் வண்ணப் பூக்கள்
கண்கவரப் பூத்திருக்குங் கவர்ச்சி கண்டே
வண்டொன்றிப்பண்ணிசைக்கும் குயில்கள் கூவும்
வளைந்துமயி லாடுமது கண்டே தேனை
உண்டுகனி கொண்டதனுல் மந்திக் கூட்டம்
ஒத்தாடிப் பல்லிளிக்கும் உவகை மிஞ்சி
அண்டையய லெங்கணுமே மகிழ்வு பொங்கும்
அழகுமுல்லைக் காட்சியினுல் மனந்துள்
ளாதோ

★ ★ ★

12-12-82

---

## 36. நாடுய்ய வேண்டும்

1. மங்களமு மெங்கணுமே பொங்கி மக்கள்
மனங்களிலே புத்துணர்வு தோன்றி யிந்தத்
துங்கமணித் திருநாட்டின் துயரந் தீர்ந்தே
தோழமையோ டனைவருமே யொன்றிவாழ
சங்கடங்கள் அத்தனையும் அழிந்தே இங்கு
சமாதானந்தழைத்தோங்கச்செய்துவெங்கள்
பொங்குகடல் சூழீழத் தாய்நா டுய்யும்
பொருட்டாகப் புத்தாண்டே பிறந்து வாராய்

★ ★ ★

2. கருகியழிந் திடவுள்ளக் கறைகள் மக்கள்
கருணையன்பு கொண்டிங்கு வாழ வென்றே
பெருகிடுநற் பேறெல்லா மொன்று கூட்டிப்
பேரிறையை வழுத்தியருள் பெற்று வாராய்
தெருவெல்லாந் தோரணங்கள் கட்டி வானைத்
தொடும்வெடிக ளோசையினல் மகிழ்வைக்
காட்டி
வருகநலந் தருகவிட ரருக வென்றே
வாழ்த்துகின்றோம் புத்தாண்டே பிறந்து
வாராய்

★ ★ ★

3. நாடெல்லாம் நெல்வயல்கள் விளைய வேண்டும்
நாடுகின்ற போதுமழை பொழிய வேண்டும்
வாடாது பயிர்செழித்து வளர வேண்டும்
வறுமையென்ப தடியோடு நீங்க வேண்டும்
பாடுபடுந் தொழிலாளர் துயரம் நீங்கப்
பல்வகையும் நாட்டினிலே பெருக வேண்டும்
பீடையழிந் தித்திருநா டுய்ய வின்பம்
பொங்கவெனப் புத்தாண்டே பிறந்து
வாராய்

* * *

27-12-87
சிந்தாமணி
07-01-88ல் இலங்கை வானொலி
-பாவளத்தில் ஒலிபரப்பானது)

# 37. நதி

1. உயர்ந்தமலை மீதினிலே ஊற்றெடுத்தே
ஊருகின்ற நதிநீலச் சிவனார் வண்ணப்
புயந்தழுவி நிற்கின்ற நாகம் போன்று
புரண்டாழி யோடொன்றப் போகும்
போழ்து
பயன்தருநன் செய்நிலத்தை நீரி லாட்டிப்
புற்பூண்டு மரஞ்செடிக்கும் புனலு மீந்து
நயம்பெறவென் றுலகத்தார்க் கிறைப டைத்த
நற்கொடையாம் நதியழகை யென்ன
வென்பேன்

★ ★ ★

2. மளமளவென் றூறுகின்ற மாதர் கண்போல்
மலைமண்ணி லாங்காங்கே யூற்றெ டுத்தே
சலசலத்துச் சமநிலத்தி லோடித் தாழ்வில்
சறுக்கிடவே சிதறியவை பிரிந்து சேர்ந்து
கலகலவென் றிரைந்துவிழுங் கற்க ளோடு
காற்றுடனே கரைந்துநுரை யாக வீசி
பலபலவாய்ப் பிரிந்தேநற் புலனை யெங்கும்
பங்கீடு செய்வதென்ன புதுமை யம்மா

★ ★ ★

3\. சீரான நிலப்பரப்பிற் தவழும் போது
சிற்றசைவால் மெல்லினத்தை யெடுத்துக்
காட்டும்
பேரிரைச்ச லோடுபள்ளத் துருளும் போது
பெரிதாக வல்லினத்தை நினைவிற்
தூண்டும்
சீரற்ற கற்களிடை பாயும் போது
சிதறுமொலி இடையினத்தைக் கூறிநிற்கும்
யார்தமிழை நதிக்கெடுத்தே ஓதி னாரோ
நற்றமிழைக் கற்றறிந்த மேதை யாமோ

★ ★ ★

18-10-84

———

## 38. சுதந்திர நிலை வேண்டும் !

1. நாட்டிமைத் தளையிருந்தே விடுபட் டின்று
நாற்பதுநல் லாண்டுகடந் தேகிற் ருனல்
தேடியவச் சுதந்திரத்தை நினைவு கூர்ந்தே
திக்கெட்டும் மகிழ்வெய்தும் நாளிற் தங்கள்
வீடுநிலம் பொருளுடைமை மற்று முள்ள
வேண்டுவன வனைத்துமிழந் திடம்பெ
யர்ந்தே
ஓடியொளிந் துயிர்வாழ்வோர் நிலைமை தன்னை
ஓர்ந்துள்ளம் வேதனையாற் தேம்பு தம்மா!

★ ★ ★

2. சுதந்திரமென் றேன்பெற்றுத் தந்தார் முன்னோர்
சுதந்திரராய் வாழ முடி யாத இன்று
விதம்விதமாய் பூசல்களை விளைத்தே நெஞ்சில்
வேதனையை விதைக்கின்ற கொடுமைக்
காமோ?
நிதங்குறையா துயிரழிந்தே மக்க ளெல்லாம்
நிம்மதியை மறந்தின்று வாழும் போது
இதமாமே யடிமைவாழ் வதிலு மென்றே
எண்ணிடத்தான் தோன்றுகின்ற தென்செய்
வோமோ?

* * *

3. காலூன்றிக் கைக்காசு பெற்று வாழ்ந்த
காலத்தில் அனைவருமே சமமொன் ருக
நூலொன்றிப் பின்னியவோ ராடை போன்றே
நிம்மதியாய்க் கூடிமகிழ்ந் தேயி ருந்தோம்
காலமது மாறியின்று மக்க ளெல்லாம்
கருத்தினிலே வேற்றுமையுந் தோன்றித்
தத்தம்
சீலமழிந் தொருவரைக்கொன் றெருவர் வாழச்
சித்தமுங்கொண் டலைகின்ரு ரென்செய்
வோமோ?

* * *

4. சுதந்திரமென் பதுவெவர்க்கும் பொதுவே!
நாட்டில்
சரித்திர நன் ஞயகர்கள் தேடித் தந்த
சுதந்திரத்தால் தம்மைத்தாம் ஆளுகின்ற
சுயமான வாழ்வுமுறை தோன்றிற் ருனல்
சுதந்திரத்தை யொன்றித்துப் பெற்ருற்
போன்றே
சாதியின மதம்மொழியாம் பேத மற்று
சுதந்திரமாய் நாடெங்கு மெவரும் வாழும்
சுமுகநிலை தோன்றுவது வென்ரு ளம்மா.

—சிந்தாமணி
31-1-88

# 39. அன்ன நடை அழகி !

1. பொன்மஞ்சள் ஒளிசிந்தும் அந்தி மாலை
புதுத்தென்றல் வீசுகின்ற இன்ப வேளை
பின்னலிடாக் கூந்தலிலே மலர்கள் சூட்டிப்
பிறைபோன்ற நெற்றியிலே திலக மிட்டு
சின்ன இடை காற்றுடத் துகிலி ழந்தே
தேனள்ளி நெஞ்சத்திற் கொட்ட மெல்ல
அன்னமென நடைபயின்று ளொருத்தி
கண்டேன்
அழகெல்லாம் ஒன்றிற்றே வெனவ யர்ந்தேன்.

* * *

2. மலை முகட்டை முகில்மூடிக் கலைதல், போல
மார்புதனைத் துகில்மூடி நழுவுங் காற்றிற்
கலைந்தாடும் குழல்மயிலின் தோகை யாகிக்
கார்கொண்ட மேகமென வண்ணங் காட்டும்
வலைமீது பிடியுண்ட கெண்டைக் கொக்க
விழிஇமையுட் தடுமாறுங் கன்னம் மின்னும்
குலையாத கட்டழகு மேனி காமன்
குடிகொண்ட திருப்பதிபோற் தோன்றிற்
றன்றே

★ ★ ★

3. குங்குமங்கொள் சிமிழுள்ளே முத்துப் போன்ற
கோவைநிற அதரத்துள் மின்னும் பற்கள்
சங்கொத்த கழுத்தினிலே மாலை யாகச்
சேர்ந்திலங்கும் ஆழிவித்தை ஒளியால்
விஞ்சும்
செங்கமலக் கன்னங்கள் பளிங்கை யொக்கும்
சிறிதுயரச் செவிப்பூக்கள் மலர்ந்தி ருக்கும்
தொங்குகின்ற குண்டலங்கள் கன்னந் தட்டும்
தொட்டவிடங் குங்குமம்போற் சிவக்கக்
கண்டேன்.

—சிந்தாமணி

02-10-88

# 40. மகிழ்ச்சிப் பொன்னுள்

1. மேதினமாம் இன்றுதொழி லாளர் நன்னுள்
மேதினியிலெங்கணுமேமகிழ்ச்சிப்பொன்னுள்
சாதிமத வினபேத மற்று ழைப்போர்
சாதியொன்று தானுயர்வென் ருேதும்
நன்னுள்

நீதிவழி போராடித் தமது வாழ்வில்
நிலையான உரிமைகளேப் பெற்ற நன்னுள்
பூதலத்தின் உயிர்மூச்சே நாங்க ளென்று
புரியவைத்த நாளிந்நாள் பொன்னுளன்ருே?

* * *

2. வாயற்று வழியற்று வாழ்ந்த காலம்
வரலாற்றில் அழிந்துழைப்பே பொருளா
தாரம்

சாயாது காக்கின்ற இருப்புத் தூணுய்ச்
சக்திதரு மெனவுணர்த்துஞ் சிறந்த நன்னுள்
ஓயாது உழைத்துலகை வாழ வைக்கும்
ஒப்பற்ற பேரினமென் றுலகோர் வாழ்த்தத்
தூயமனத் துணிவோடு கூடி யொன்ருய்த்
துன்பத்தை மறந்துமகிழ் வெய்தும் நன்னுள்

★ ★ ★

சிந்தாமணி

01-05-88

# 41. குறையற்ற வாழ்வு

1. நல்லறிஞ ரொருவரோ டுரையா டுங்கால்
நான்கற்ற பாடமொன்றை யுரைப்பேன் கேண்மின்
எல்லோர்க்கும் பயனுடைத்தாம் ஓர்ந்தே வாழ்வில்
ஏற்றெழுகத் தக்கனவாம் அறிவுள் ளோரே
தொல்லுலகில் மனிதனுயர் வெற்றி காணத்
தேவையிவை யென்றவரும் எடுத்து ரைத்தார்
கல்லார்க்கும் இவைகிட்டிப் போனல் வாழ்வில்
கடைசிவரை துன்பமில்லை வெற்றி தானே.

*   *   *

2. தெய்வத்தின் திருப்பொருத்தம் வாய்க்க வேண்டும்
தேவைவரும் போதவனின் அருளும் வேண்டும்
செய்தொழிலில் வெற்றிகிட்ட வேண்டுஞ் செல்வஞ்
சிறந்தோங்க வேண்டும் புகழ் சேர வேண்டும்
வையகத்தில் பெரும்பேறே மனைவி வாய்த்தல்
வாய்த்ததிவை மூன்றுமெனக் கெனவு ரைத்தார்
ஐயா! இவை மூன்றுமெனக் குண்டென் றேன்நான்
அகமகிழ்ந்தார் அவரோடு நானுஞ் சேர்ந்தேன்.

★   ★   ★

3. பிள்ளைகளும் நல்லவராய்ப் பிறந்தேவாழ்ந்தால்
பெற்றவர்க்குக் குறையொன்று மில்லை
தேடிக்
கொள்ளை கொள்ளை யாய்ப்பொருளைச்
சேர்த்திட் டாலும்
குலந்தழைக்க நல்மக்கள் வேண்டு
மென்றார்
வள்ளலிறை வன்விரும்பி மகளுக் கோர் நல்
வாழ்வின் துணை சீர்சிறப்போட ளித்தும்
விட்டால்
எள்ளளவும் அவன் வாழ்வில் குறையே யில்லை
எனக்குண்டே உனக்குமது வாய்க்கு
மென்றார்.

★ ★ ★

சிந்தாமணி 07-08-88

## 42. காத்திருப்பேன் !

1\. மதுரைத் திருக்கோவிற்சிலையொன்று உயிர்பெற்று
மயில் போல் முன் ஆடிற்றம்மா—அதன்
புதுமேனி அழகோடு பொன்போல மின்னவென்
புத்திதடு மாறிற்றம்மா.

★ ★ ★

2\. அலைபோன்ற கூந்தலும் அசைந்தாடக்—
கொண்டைமலர்
அளிகளோ டுறவாடவே —நெஞ்ச
மலைமீது படர்ந்தவை மூடிடத் தென்றலும்
மிதமாக வீசிற்றம்மா.

* * *

3\. மெட்டியொடு சதங்கையும் மேகலையுங் கூடியே
மெல்லிசைப் பாட்டிசைக்க—அவள்
எட்டி நடை பயில்கையில் இணைந்தோடும்
மின்னலின்
எழிலினுக் கிணையேதம்மா ?

* * *

4\. கட்டிக் கரும்பதோ ? கனிச்சாறோ ? தேனோ? நற்
கன்னியிதழ் சுவையமுதமோ?—அதை
ஒட்டியே சுவைத்திட உறுத்துமென் உள்ளத்தின்
உணர்வினைப் புரியாளம்மா.

* * *

5. மானென மருளவிழி மானவள் மருண்டனள்
மதுவுண்ட களிகொண்டு நான்—அது
ஏனென விளிக்கவவள் எதுவுமே செப்பிடா
தெனைவிட்டுப் பறந்தாளம்மா.

6. வட்டமதி முகத்தினின் வடிவினு லவளென்னை
வசமாக்கிக் கொண்டாளம்மா—அவள்
இட்டம்போ லென்னேடு இணைந்திடும் நாளினுக்
கேங்கியே இருப்பேனம்மா.

★ ★ ★

சிந்தாமணி

14-08-88

# 43. ஆசைக்கும் அளவு !

1. சிற்றுளியாற் சிலைசெதுக்க லாமே யன்றிச்
சேர்ந்த பெரு மலைத்தொடரைத் தகர்க்க
லாமோ?
வற்ருதே ஓடிடினுஞ் சிற்ருே டைதான்
வழி காணும் அனைத்தையுமே தள்ளிப்
போமோ?
கற்குழியும் எறும்பூர ஆனல் அந்தக்
கல்லுதிர்ந்துபோகாதே இவற்றை எல்லாம்
சற்றேனும் உணராத சிலபேர் வானிற்
சிறகடித்துப் பறக்கவென முயல்கின் ருரே

* * *

2. ஊர்க்குருவி பருந்தினைப் போற் பறக்க லாமோ?
உடல் சோர்ந்தால் உறுவினையை
மறக்கலாமோ?
பாராளப் பரதேசி கனவு கண்டாற்
பலிக்காதென் றறியாதேன் அலைய
வேண்டும்
ஊரூராய்க் கையேந்திப் பிச்சை கொண்டே
உயிர்வாழ்வோன் உலகிற்கே தீனி போடப்
பேராசை கொண்டிட்டாற் பொருந்து மாமோ?
பித்தனிவ னென்றுலகம் இகழு மாமே

* * *

3. ஏவுகின்ற புயவலிமைக் கேற்பத் தானே
இலக்கினையும் தேர்ந்தெடுக்க வேண்டுந்
தாண்டித்
தாவுகின்ற தன்வலிமைக் கொக்கத் தானே
தாவுமிடந் தனைக்கொள்ள வேண்டும்
அன்றி
ஏவுமிடம் எல்லைகடந் திருப்பின் எய்வோன்
எண்ணம்நிறை வேருதென் றறிதல்
வேண்டும்
தாவுமிடம் தொலைவிலுள தென்ருல் தாவித்
தடம்புரளத் தலைபோகும் உலகி னேரே

★ ★ ★

4. முடவன்தன் ஆசைகளை அடக்க வேண்டும்
முடிந்தமட்டுந் தான்முயல வேண்டும் கால
இடமறிந்தே தன் தலையை நுழைக்க வேண்டும்
இடறிவிடாதத்தலையைக் காக்க வேண்டும்
தொடர்ந்து முயன் ருல்வெற்றி யுண்டென்
றெண்ணித்
துணிந்துமுயன் றிடவேண்டும் அதற்கு
முன்னே
அடைய முடிந் திடுமோவென் ருய்ந்த பின்னே
அடியெடுத்து வைத்திடவும் வேண்டும்
மாதோ

★ ★ ★

சிந்தாமணி 28-08-88

# 44. ஏன் படைத்தாய்?

1. ஏனுலகைப் படைத்தாய் நீ இறைவா இங்கு
எண்ணற்ற பற்பலவும் படைத்த தேனே
காளுேடு மலை நதிகள் படைத்தாய் நீலக்
கடலோடு வான்படைத்தாய் உயிரி னத்தில்
ஆணோடு பெண் படைத்தாய் அவைகள் சேர
அற்புதமாய்ப் பிறிதொன்றைத் தோன்றச்
செய்தாய்
தானாக விவையெல்லா மேனே செய்தாய்?
தனித்திருந்தேஇவைகண்டுமகிழ்வதற்கோ?

★ ★ ★

2. பூவென்று ஒன்றினையே படைத்தாய் அஃதில்
புதிதாகத் தேனூறச் செய்தாய் பூவை
நாவினிக்கப் புசித்துண்ணுங் கனியாய் மாற்றி
நல்லுணவாய் உயிரினத்துக் களித்தாய்
காயுள்
தூவிவைத்த விதைகொண்டே மரஞ்செடிகள்
தோன்றிடப்பின் அவைபூத்துக் காய்க்கச்
செய்தாய்
யாவுமுன தாணைக்குள் ளடக்கிக் காப்ப
தேனிறைவா அவைகண்டு மகிழ்வ தற்கோ?

★ ★ ★

3. உயிரினத்தில் மனிதனேமே லாய்ப்படைத்தாய்
உயர்வாகப் பகுத்தறிவை உவந்த ளித்தாய்
நயந்தவர்க்கே அனைத்தும்வய மாகச் செய்தாய்
நன்மைகளை அனைத்தையுமே கற்பித்
தாய்தம்
செயலாலே விலங்கினிலுங் கேடாய் மாறிச்
சிறுமையுறப் பாவங்கள் செய்து வாழ்வின்
துயராலே அழிகின்ற ரவரைக் கண்டு
துன்புறவோ மனுக்குலத்தைப் படைத்தாய்
நீயே?

★ ★ ★

சிந்தாமணி

18-09-88

## 45. நன்றே வாழ

1\. பற்பலவுங் கற்றறிதல் வேண்டும் ஒன்றில்
பண்டிதனுய்த் தேறிடவும் வேண்டும் நன்றே
மற்றவர்க்கும் போதிக்க வேண்டும் நல்ல
மனத்தோடு தாமதனைச் செய்ய வேண்டும்
கற்றவற்றில் நல்லவற்றைப் பேண வேண்டும்
கருத்தற்ற வற்றைமனம் மறக்க வேண்டும்
சொற்போன்று தான்செயலும் இருக்க வேண்டும்
சுயமான சிந்தனையுந் தெளிவும் வேண்டும்.

★ ★ ★

2\. மொழிகள்பல அறிந்திருக்க வேண்டும் ஏற்ற
முறையாக மூவழியுந் தெரிய வேண்டும்
பழியாது பிறர்மொழியை மதிக்க வேண்டும்
பற்றிருந்தால் மட்டுமவை பயில வேண்டும்
இழிவாகா பிறமொழிகள் கற்றல் என்றும்
ஏற்றமுடைத் தாமதனை யுணர வேண்டும்
அழியாது தாய்மொழியைக் காக்க வேண்டும்
அதுவேநம் உயிர்மூச்சாய் இருக்க வேண்டும்.

★ ★ ★

3. தொழிலொன்று தான்செய்ய வேண்டுஞ் செய்யுந்
தொழினிலிலே நேர்மைதனேக்கொள்ளவேண்டும்
பழிபாவந் தனக்கஞ்ச வேண்டும் யார்க்கும்
பாதகஞ்செய் யாதுபொருள் தேட வேண்டும்
வழிகண்ட இடமெல்லாஞ் செல்வந் தேடும்
வாஞ்சைதனே மனத்திருந்தே யகற்ற வேண்டும்
இழிவான தொழில்தனேயும் வெறுக்க வேண்டும்
எதிலுமொரு நற்கொள்கை இருக்க வேண்டும்.

* * *

தினகரன்

19-09-88

# 46. மீண்டும் வருகவே !

2. கள்ளுண்ட போதையினல் அலேவோர் மற்றுங்
களவாலே யுயிர் வாழ்வோர் உயிர்கள்
தம்மை
எள்ளளவும் இரக்கமற்றுப் பறிப்போர் சூதில்
இழந்தபொரு ளால்துன்ப மடைவோர்
இன்னும்
கள்ளவழிப் புணர்ச்சியிலே நாட்டங் கொண்டோர்
கணக்கிலடங் காரிவரைக் காண மீண்டும்
உள்ளமிருந் தாலுகில் மனித ஞக
உத்தமனே புத்தனே பிறந்து வாராய்.

* * *

2. பொய்யுரைத்தே ஏமாற்றிப் பிழைப்போர் கையில்
பொருளிருப்போர் தமைச்சுரண்ட
அலேவோர்தீது
செய்யுமுவப் போடுவொரு தருணம் நேர்ந்தால்
சட்டென்று கால்வாரி விடுவோர் இன்னும்
துய்யமன மற்றுள்ளப் பொருமை கொண்டே
துன்பம்பிறர்க் கிழைத்துமகிழ் வோரைக்
காண
வையகத்தில் மீண்டுமொரு மனித ஞக
வரம் பெற்றுப் புத்தனே பிறந்து வாராய்.

* * *

3. சித்தார்த்தன் தத்துவமே பௌத்த மெங்கள்
சீர்பெறுநன் நாட்டினுயர் கொள்கை
யென்றே
மெத்தவுமே புகழ் பாடு வார்தம் வாழ்வில்
மிகச்சிறிதும் கைகொள்ள மறந்த தேனோ?
உத்தமன் போல் வேஷமிடும் பேர்க ளின்று
உன் விரோத சக்திகளே கண்ணால் காணச்
சத்தியத்தின் காவலனே ! புத்த னே! யிச்
சமய மதில் மனிதனெனப் பிறந்து வாராய்.

* * *

சிந்தாமணி
25-9-1988

# 47. சந்தேகம் ஏனோ ?

1. கொண்டவளைச் சந்தேகங் கொண்டால் வாழ்வில்
குடும்பநலங் குன்றிமன அமைதி போகும்
கண்டகண்ட பெண்ணோடு கணவ னுக்குக்
காதலுற வெனவெண்ணின் துயர்தான் மிஞ்சும்
அண்டையயல் பழித்தவரைச் சிரிக்குஞ் சொந்த
அகத்துடைய மற்றோரும் இகழக் கூடும்
தண்டனையும் பின்னொருநாள் கிடைக்குந் தெய்வத்
திருப்பொருத்தம் அற்றதனால் அவர்க்குத் தானே

* * *

2. உள்ளத்திற் தோன்றுகின்ற ஐயத் தாலே
ஒவ்வொன்றும் ஒவ்வாத தாகத் தோன்றும்
எள்ளளவு தவறிடினும் மலைபோற் தோன்றும்
எடுத்ததற்கும் பிடித்ததற்கும் போரே தோன்றும்
உள்ளதையும் உண்மையையும் மறுக்கத் தோன்றும்
உருமாற்றிப் பொய்யையுண்மை யாக்கத் தோன்றும்
கள்ளமனம் காமாலைக் கண்போ லாகிக்
காண்பவைகள் அனைத்திலுமே கறையைக் காணும்

* * *

3. கருவினிலே மனிதனோடு ஐயம் கூடிக்
கலந்துபிறந் ததைவிலக்கல் கடினங் காலப்
பருவங்கள் சூழ்நிலைகள் சந்தர்ப் பங்கள்
பலவிதத்தி லேயுதவும் பொறுமை வேண்டும்
இருவருமே சந்தேகந் தோன்று வாறு
எதனையுமே சிந்தித்தே செய்தல் வேண்டும்
ஒருவரைநன் றுயொருவர் அறிய வேண்டும்
உளத்தினிலே நம்பிக்கைதோன்றவேண்டும்

சிந்தாமணி

09-10-88

## 48. துன்பம் நீங்கட்டும்!

1. புத்தாண்டு இன்றுபி றந்ததடி—இன்பம்
பூத்துக்கு லுங்கிட வந்ததடி
நித்தமும் புதுப்புதுப் பாக்கியங்கள்—எம்மை
நாடிவ ரும்மது உண்மையடி

\+ + +

2. நாட்டினில் அமைதியுந் தோன்றுமடி—நாங்கள்
நாளும்ப டுந்துன்பம் நீங்குமடி
வீட்டிற்கு வீடிங்கு மக்களிடை—உள்ள
வேற்றுமை மாய்ந்தின்பங் கூடுமடி

\+ + +

3. மாதமும் மும்மாரி பெய்திடணும்—இந்த
மண்ணுஞ்செ ழித்திடப் பொழிந்திடணும்
நீதியும் நேர்மையும் வென்றிடணும்—உண்மை
நிலைபெறத் தெய்வமும் அருள்தரணும்

\+ + +

4. தேயிலை கொக்கோ ரப்பரெனும்—எங்கள்
தேசிய விளைபொருட் செல்வத்தினால்
தூயம ணப்பொருட் திரவியத்தால்—நாட்டின்
தேவைக்கும் மேற்திரு சேர்ந்திடணும்

\+ + +

5. நெல்லோடு தெங்கும் பெருகிடணும்--எங்கள்
நெஞ்சமும் மகிழ்ந்திடக் குவிந்திடணும்
இல்லையெ னும்பிணி நீங்கிடணும்—இங்கு
எல்லோரும் எல்லாமும் பெற்றிடணும்

சிந்தாமணி

01-01-89

# 49. வாழ்வின் பருவங்கள்

1. ஓதிவைத்தார் சான்றோர்கள் மனித வாழ்வை
ஒப்பிட்ட காலத்தோ டவைகள் நான்கு
பதினாறு வயதுவரை சிறிய பிள்ளைப்
பருவமது இளம்பிஞ்சுக் காலம் மாறி
பதினாறில் இருந்தேநாற் பத்து மட்டும்
பருவமிள ஆசைகளின் நாள்வ சந்தம்
அதிலிருந்தோர் அறுபத்து நான்கு காணின்
அதுகோடை இலையுதிர்பின் தொடரு
மென்றார்

\+ + +

2. கொஞ்சுமொழி பேசிவிளை யாடுங் காலம்
குழந்தையெனப் பெயர்கொண்ட பருவ
காலம்
பஞ்சினைப் போல்மென்னிதயம்படித்த தெல்லாம்
பசுமரத்திற் பதிவதுபோற் பதியுங் காலம்
வஞ்சமற்ற தூயமனங் கொண்ட காலம்
வளருகின்ற பயிர்போன்ற இளமைக் காலம்
பிஞ்சுடலம் பால்வதனம் பிள்ளைக் காலம்
பேர்பெறுமே மாரியெனப் பருவத் தாலே.

\+ + +

3. வசந்தத்தின் முதற்பகுதி இன்பம் காதல்
வசமாகி எதிர்ப்பாலோ டிணையுங் காலம்
பசுந்தளிர்போல் உடலிருக்குங் காலம் உள்ளம்
பற்பலவாய் ஆசைகளை வளர்க்குங் காலம்
இசைந்தவளோ டொன்றிப்பின் பாதி நாட்கள்
இல்லறத்தின் இன்பத்தை நுகருங் காலம்
பசுமைமிகு வசந்தத்தின் காலம் நெஞ்சிற்
பதிந்திருக்கும் பொன்போன்ற கால மாமே

\+ + +

4. கோடையிலே மரஞ்செடிகள் பசுமை குன்றிக்
காணுமது போல்நாற்ப தாண்டின் பின்னே
தேடிவரும் பிணியுடலந் தொய்யும் ஏற்றந்
தெரியாமற் சரியும்நரை தொற்றிக்
கொள்ளும்
நாடிவரும் மூப்பினையுள் மனமுஞ் சொல்லும்
நாளுக்கு நாள்தேகஞ் சாட்சி கூறும்
ஆடியதன் ஆட்டமெலாம் அடங்க மிஞ்சும்
ஆசைமட்டும் பின்னரிலை யுதிர்தல் தானே.

சிந்தாமணி

22-01-89

## 50. செயற்கை மரணங்கள்

1. நாயொன்றை அடித்தெவருங்கொன்று விட்டால்
நாற்பதுபேர் கூடிநின்றே உற்று நோக்கி
வாயில்லாச் சீவனையோ இதைவ தைத்தோர்
வம்பரென இகழ்ந்துரைப்போம் அன்று
இன்றோ
நோய்நொடியால் இறப்பவர்கள் கொஞ்சம்
வாழ்வு
நிறைவுபெறு தழிப்பவர்கள் பலநூ றாகும்
மாயமாம் இவ்வுலகில் மரணம் கெட்ட
மானிடரால் மலிந்துலகம் வாடு தம்மா.

* * *

2. வெள்ளத்தால் பெருநெருப்பால் பூகம் பத்தால்
வீசுகின்ற புயற்காற்றின் கடுஞ்சி னத்தால்
கொள்ளைகொள்ளை யாய்மனிதர் அழிவதெல்லாம்
குவலயத்தில் இயற்கையினோர் விளையாட்
டாகும்
எள்ளளவும் மன்னுயிர்க்கு மதிப்பே யற்று
இயற்கைக்குப் புறம்பான வாறும் இன்று
கொள்ளைகொள்ளப் படுகிறதே மனித ஜீவன்
கொடுமையந்த நிலையென்றுமறையுமாமோ

★ ★ ★

3. குண்டொன்று வெடிக்குமதன் கொடுமை யாலே
கும்பல்கும்ப லாயுயிர்கள் அழியுஞ் சின்னச்
சண்டைகளும் பெரிதாகி உயிர்கு டிக்கும்
சேனைகளும் பொருகின்ற சமர்க்க ளத்தில்
கண்டபடி மனிதவுயிர் மறைந்தே போகும்
காலனுக்கும் வேலைமிக எளிதாய்த்
தோன்றும்
மண்டலங்கள் அனைத்தையுமே இப்பெ ரும்நோய்
மண்டியிடச் செய்வதொரு விந்தை யம்மா.

* * *

4. பாராளும் ஆசையினுற் கொல்வோர் சொந்தப்
பகைமையினுல்மறைந்திருந்தே அழிப்போர்
கைப்பொன்
ஏராளம் பெற்றறியார் தம்மைக் கொல்லும்
ஈனர்களும் மலிந்தின்று வாழ்கின் ருரே
கூரான ஆயுதங்கள் குறிபார்த் தொன்றைக்
கொல்லுகின்ற துப்பாக்கி போன்ற வற்ருல்
தாரான மாயுயிரைப் பறிப்போ ரிந்தத்
தரணியிலே இலாதொழிதல்-என்று தானே

\+ + +

சிந்தாமணி

29-01-86

# 51. அனைவரும் ஒன்றுபடுவோம்

1. சுதந்திரம் பெற்றின்று நாற்பது ஆண்டுகள்
சொல்லாமற் சென்ற தேயடா-ஒரு
உதயத்தி ஞலிருள் மாய்ந்தது போலுமோர்
உணர்வன்று இருந்த தாமடா
இதமான அவ்வுணர் வின்றுமெம் மக்களின்
இதயத்திற் பசுமை தானடா-இங்கு
நிதமந்தச் சுதந்திர உணர்வோடு அனைவரும்
நேசமாய் வாழு வோமடா.

\+ + +

2. பிறந்ததிம் மண்ணிலோர் பேறெனை எண்ணியே
பேதமே மறந்து வாழுவோம்-நாங்கள்
இறந்தாலும் இறப்பதிம்மண்ணினிற்தானெனும்
எண்ணத்தில் உறுதி கொள்வோம்
வேற்றுமைமறந்தொன்றிவாழுவோம் சுதந்திரம்
வேண்டுமென ஒன்று பட்டு—அன்று
ஏற்றங்கள் கண்டவெம் முன்னேரைப் போல
நாம்
இணைந்துமே வாழ முயல் வோம்.

\+ + +

3. அனைவர்க்கும் உரிமைகள் பொதுவிந்த
மண்ணிலே
அதனிலும் கடமை மேலடா—இங்கு
இனமத மொழிபிற பேதங்கள் மாய்ந்திட
ஏற்றநல் வழிகள் காணடா
அன்னியர்க் கடிபணிந் தன்றுநாம்வாழ்க்கையில்
அனைவரும் ஒருவரானோம்—இன்று
தன்னையும் பிறரையும் வெவ்வேறு என்றுலித்
தரணியில் அமைதி ஏதடா.

தினகரன்

04-02-89

# 52. அரங்கேற்றம்

1. வான்கரு முகிலே வாவென் றழைத்தே
யுறவுகொள்ள
தேன்நில வதனைச் சிறிது விலக்கி முகங்காட்ட
மானுட மோய்ந்துல கமைதியி லாழ்ந்தே
தூங்கிவிட
மோனமா யிளமையு மொன்றுட ஞென்றே
யுடல்கூடும்

\+ + +

2. சீதளம் மேவிய தென்ற லசைவா லுடல்சிலிர்க்க
ஊது குழலி னேருயர் நாதமு மதுவிசைக்க
பூதல மோவிது புதுமையா மென்றே
மனஞ்சொல்ல
காதல னணைப்பினிற் காதலி யாங்கே குளிர்
காய்ந்தாள்

\+ + +

3. தேடு மிளமை யாவலி னுலுளந் துடிதுடிக்கும்
கூடு மிரண்டுட லும்மிணைந்தேபுதுச்சுகங்காணும்
ஆடை யகன்றிடு மாண்மையுட் பெண்மை
யடங்கிவிடும்
நாடக மொன்ருங் கொருவரு மறியா தரங்கேறும்

\+ + +

4 பாதி விழித்திரை மூடிடப் பாவை முகஞ்சிவக்கும்
ஏது முரைத்திட வறியா தேயவள் வாய்குழறும்
மோது முணர்வலே மேலிட வுடல மோநடுங்கும்
மாதவ லீலை தொடர்ந்துட லீற்றிற்
குளிர்ந்திடுமே

தினகரன்
04-11-85

## 53. கல்வியின் சிறப்பு

1. இளமையிலே கல்விதனைக் கற்க வேண்டும்
இயன்றவரை முயன்றுமனங் கொள்ள வேண்டும்
வளமான வாழ்வுக்குக் கல்வி யொன்றே
வழிகாட்டு மென்றவுண்மை யறிய வேண்டும்
''களவெனினுங் கற்றுமற'' என்றார் முன்னோர்
கருத்தினிலே நல்லவையே நிலைக்கவேண்டும்
அளவென்ப தில்லையறி வதற்குத் தேடும்
அளவிற்குள் ளவர்வாழ்வுஞ் சிறக்கு மாமே.

\+ \+ \+

2. ஏட்டறிவு மட்டுந்தான் அறிவென் றாகா
எழுத்தறியா மேதைகளும் வாழ்ந்தே போனார்
நாட்டுநடை முறையறிவும் வேண்டும் நல்லோர்
நல்லவுப தேசத்தாற் றெளிவும் வேண்டும்
போட்டியிட்டுக் கல்விதனி லுயர வேண்டும்
பொறாமையற்ற தாகவது மிருக்க வேண்டும்
மாட்சிமையுண் டாங்கல்வி கற்றோர்க் கென்றும்
கற்றோருள் முதன்மையவர் தமக்குத் தானே.

\+ \+ \+

3. கற்றவனே யவைமுதன்மை யேற்பான் கற்ற
கல்வியினுல் மற்றவரை ஆள்வான் நாட்டின்
கொற்றவனுஞ் செல்வதவன் வழியே ஆட்சிக்
கொள்கைகளும் அவன் வகுத்த வாறே
செல்லும்
வெற்றிக்கும் புகழுக்கும் மதியூ கத்தால்
வழங்குமவன் அறிவொன்றேகாலாய் நிற்கும்
சொற்கொண்டா லவன்வழியிற்சென்ருலென்றும்
சோதனைகள் வந்தாலும் தோல்வி யில்லை.

தினகரன்

30-3-88

## 54. தெவிட்டாத இன்பம்

1. முற்றியநெற் கதிர்களெலாம் நிலத்தை நோக்கி
முகந்தாழ்த்தி மடிந்தனவே இதுநா
ளெல்லாம்
பற்றுடனே யொன்றாக வாழ்ந்து விட்ட
பாசத்தை மறவாத கார ணத்தால்
கற்புடைய மாதொருத்தி பிரிவை யெண்ணிக்
கணவன் பெரு மார்பினிலே புரள்தல் போல
நிற்பதுகாண் பதற்கினிய காட்சி யாகி
நன்னிலமாம் மருதமண்ணி னெழிலைக்
காட்டும்

\+ \+ \+

2. விரிந்த நெடு வயற்பரப்பி னிடையி டையே
வெட்டியிட்ட நெற்கதிர்கள் வெயிலில்
காயும்
பரந்தெறிக்கு மொளிக்கீற்றில் நெற்க
ளெல்லாம்
பசும்பொன்போல் மணிமணியாய் மின்னு
மஃது
பரத்திவிட்ட வெண்மஞ்சப் பட்டின் மீது
படிந்திலங்கும் பூவண்ணம் போலு மாக
தெரியுமழ கெழில்கொஞ்சும் மருத
மண்ணின்
தெவிட்டாத வின்பத்தை யூட்டு தன்றே

\+ \+ \+

3. கற்றை கற்றை யாய்க்கதிர்க ளொன்று கூட்டி
கன்னியிளஞ் சிட்டுக்கள் சிரசில் தாங்கி
ஒற்றுமையா யொருவர்பின் னொருவர் சேர்ந்து
ஒய்யார நடைநடக்க உலர்ந்து காய்ந்த
நெற்களவை சேர்ந்திருந்த கதிர்வி டுத்து
நிலத்தினிலே வீழுமவை கொத்தி யுண்ணச்
சுற்றுகின்ற வெண்புறுக்கள் மேக மாகச்
சுழலவாங்கே இளமுகங்கள் மதிக ளாகும்.

\+ + +

04-10-1987

சிந்தாமணி

## 55. இளவலுந் தோன்றினனே

1. தாங்கிய நாளி ருந்தே தாயுட லிடைவி டாது
தாங்கிய துயர மெல்லாந் தனித்தொன்றி
வந்தேயோர் நாள்
ஓங்கிடு மதனைச் செப்ப வுள்ளதோ வார்த்தை
யுள்ளே
தேங்கியே யிருந்த செல்வந் தனையுல
கறியும் நாளில்

★ ★ ★

2. மெல்லவே முன்னும் பின்னும் முயன்றனள்
நடைதளர்ந்தாள்
கல்லென வசையா தேங்கிக் கண்கணீர்
சொரிய நின்றாள்
பல்லினைக் கடித்தே நோவி னுபாதையைக்
குறைக்க எண்ணி
வில்லென வளைந்தே சோர்ந்தாள் வேதனை
கூடிற் றன்றே

* * *

3. சுள்ளெனத் தோன்றி மேலுந் தொடர்ந்திடை
விடுத்து மீண்டும்
உள்ளிருந் துடல மெல்லாம் ஒன்றென நடுங்கக்
கூடி
அள்ளியே மேல்வ யிற்றை யடிவரை
பிழிந்து தள்ளி
பிள்ளையொன் றுலகுக் கீயும் பெரும்பணி
தொடர்ந்த தன்றே

* * *

4. ஈற்றினி லிடைவி டாத விடரது தொடரத்தேக
ஆற்றலும் ஒன்று கூட அவள்படு துயரம் நீங்கி
நோற்றநன் நோன்பின் தேருய் நோய்மறந்
தின்பந் துய்க்க
ஏற்றநல் வரவா யோர்நல் லிளவலுந்
தோன்றி ஞனே.

29-10-1972

## 56. எந்தனுக்கே சொந்தம் உன் அழகு

1. முன்வாசற் தூணுந்தன் முதுகைத் தாங்க
முழந்தாளே மடித்தொற்றைக் காலில் நின்று
என்னவரம் வேண்டிநின்ருய் தவசி போன்றே
ஏங்கிவிழி தேடுவதும் யாரைத் தாஞே
தன்னேமறந் தேவழியை நோக்கும் உந்தன்
தவக்கோலம் கலேத்திடவுன் முன்நான்
வந்தேன்
என்னநினேந் தாயோவுன் வதனந் தன்னே
இருகரத்தால் மூடியுளம் வருந்தச் செய்தாய்

\+ + +

2. மென்விரல்கள் விலகவத ஞூடா யுந்தன்
மலர்விழிகள் சுழலமுகம் மறைந்த போதும்
தென்ஞேலேக் கீற்றிடையே தோன்று கின்ற
தேன்மதிபோ லுள்ளத்தைச் சுண்டி யீர்க்கும்
மின்னல்மொழி பேசுமுந்தன் விழிகள் காதில்
மேகமெனச் சுருண்டுவிழுங் கூந்த லோடு
கன்னலெனக் கனிகின்ற வதரங் காண்போர்
கண்பட்டு விடுமென்ருே மறைந்து நின்ருய்

\+ + +

3. வானில்மதி தோன்றிடினும் பூமிக் கன்றே
வழங்குமத னொளிசொந்தம் பூவி லூறும்
தேனின்சுவை யுணருவது வண்டே யன்றி
தேக்கிவைக்கும் மலருக்குச் சொந்த மாமோ
கானமயி லகவுமத னழகைக் கண்டு
களிப்பததன் பேடைமயி லறியு மாமோ
ஏனறிய மாட்டாயோ விதுபோ லுந்தன்
இயற்கையழ கெனக்கேதான் சொந்த
மென்றே

\+ \+ \+

சிந்தாமணி
13-09-87

# 57. ஞான ஊனங்கள்

1. போதைதரு வில்லைகளை யுண்போர் போதைப்
பொடியெரித்துப் புகையதனை நுகர்வோர் தேக
வேதனைகள் போக்கிமன நிலையை மாற்றும்
வெறிகொண்ட மருந்துகளை யூசி மூலம்
தோதான நாளத்தைத் தேர்ந்தெ டுத்துத்
துளைத்துள்ளே செலுத்திமகிழ் வோர்கள் தம்மின்
போதாத காலமதோ வவைக்கி ரையாய்ப்
போகமுயல் கின்றனரே ஏனிக் கேடோ

\+ + +

2. சிறியபொழு துலகினையே மறந்து வானிற்
சிறகடித்துப் பறப்பதுபோ லுணர்வு கண்டு
பிறிதான வேற்றுலகில் தனித்தே யின்பப்
பிரளயத்தி லுழலுவது போலு மாவார்
வெறியடங்கிச் சுயவுணர்வு வந்திட் டாலும்
விவரமொன்று மறியாத சூனி யத்தில்
பொறிகலங்கிப் புலனழிந்து பித்தர் போல
பெருமின்னல் தனக்குள்ளே யாகின் றாரே

\+ + +

3. தான்பேர்தைக் கிரையாகி யழித லோடு
தமக்கறிந்தோர் தமையுமதற் கடிமை யாக்கி
ஏனிளையோர் வாழுகிருர் எதிர்கா லத்தில்
இவர்கையை யுலகுநம்பி இருக்கும் போது
போனநிலை மறந்துள்ளந் திருந்தி வாழ்வில்
புதுவுணர்வு கொண்டுழைக்க வேண்டும் ஞான
ஊனங்கள் மறைந்தொழிய வேண்டுங் காலம்
உயர்வான சந்ததியைக் காண வேண்டும்

+ + +

20-05-85

## 58. 1983ஆண்டு ஜூலை 23-25களில்

1. வரலாற்றின் ஏடதனில் வடுவாய்ப் பொல்லா
வன்முறையின் சிகரமென ஈழ நாட்டின்
பெருமைதனைக் குழிதோண்டிப் புதைத்த
தொக்கும்
பெரும்பாவச் செயல்கள்தனைச் செப்பக்
கேள்மின்

இருபதாம் நூற்றாண்டின் இறுதிக் காலம்
எண்பத்து மூன்றுமாண் டேழாந் திங்கள்
குருதியினால் எழுதிவிட்ட அத்தி யாயம்
குவலயமிஃ துள்ளளவும் அழியா தம்மா

\+ + +

2. பெரும்பான்மை நாமிந்த மண்ணில் மற்றோர்
பிறந்தாலு மிந்நாட்டில் உரிமை அற்றோர்
விரும்பாத இதுபோன்ற வார்த்தை கூறி
வெறிகொண்டா ரூட்டிவிட்ட உணர்ச்சி
யாலே
இரும்பாக வுளம்மாறிக் குரோதம் மிஞ்சி
இருதரப்பு மக்களுமே பகைமை கொண்டு
பிரிந்திங்கு வாழுவதே உவப்பென் றெண்ணிப்
பிறந்ததொரு புரட்சியிந்த மண்ணி லாமே.

\+ + +

3. சிறுபான்மை இனத்தவரி னுரிமை தன்னைச்
சிந்தித்தும் பாராத நிலைமை கண்டு
பொறுத்திருந்தும் பயனற்றுப் போன தாலே
புரியவைத்தார் புரிந்துமவர் புரியா
தோராய்

வெறுத்தொதுக்கு மெண்ணமதே கொண்டார்
கெட்ட
வேற்றுமையே அரசியலாய்ச் சிலர்வ ரித்தார்
பெர்றுத்ததினிப் போதுமெனப் பொங்கித்
தங்கள்
புயபலத்தா லுரிமை பெறத் துணிந்திட்
டாரே

\+ + +

4. தமிழீழந் தனைக்கோரித் தானை வீரர்
தம்மோடு தம்மினத்திற் தமக்கு வேண்டாத்
தமிழ்த்தலைவர் தன்னையுஞ்சேர்த் தழித்த
செய்கை
தாமிந்தத் தழும்பீழத் தாயின் நெஞ்சில்
தமிசொன்று தாவித்தன் தாகந் தீரத்
தாக்கியதாற் தோன்றியது போலு மென்ன
தமிழினத்தின் மீதுபழி தீர்த்துக் கொள்ளத்
தான்து ணிந்த தோர்வெறியர் கூட்டம்
மாதோ

\+ + +

5. இருபத்து மூன்ரும்நாள் ஏழாந் திங்கள்
இரவிவலம் வருவதற்கு முன்னே சற்றும்
வருவினையை அறியாத வெறியர் கூட்டம்
வகைவகையாய் ஆயுதங்கள் தனையுந்
தாங்கி
பொருதவவ ரெவருமற்றுப் பிரியம் போல
பெருந்திரளாய்க் கூடித்தமிழ்க் கடைகள் தேடி
கருமமது கண்ணுயி ஞரே கொள்ளைக்
காரணமே காரணமாய்க் கவர்ந்தே சென்ருர்

6. இரவெல்லாங் கொள்ளையிட்டோர் போக
இன்னும்
எங்கிருந்தோ எஞ்சியதைச் சுருட்டிச்
செல்லக்
குரவையிட்டுக் குதுகலித்தோர் காடைக் கூட்டம்
கூடிவந்து கொள்ளைதனைத் தொடர்ந்த
தாங்கே
பொருளனைத்தும் முடிந்ததனாற் பிறிதோர்
கூட்டம்
பெருஞ்சினத்தோ டெஞ்சியதைத் தீயி
விட்டார்
பெருநெருப்புஞ் சுடர்விட்டு எரியக் கண்ட
பகலவனும் போட்டிக்கென் றுதய மானான்

\+ \+ \+

7. வழியெல்லாம் பொருள்களினை வாரி வீசி
வாகனங்கள் தனையுடைத்துத் தீயு மிட்டார்
பழிபாவந் தனைய றியாப் பாவி யர்கள்
பாதையெலாங் கூடிநின்றே ஆர்ப்ப ரித்தார்
இழிவான விச்செயல்கள் கண்டு நெஞ்சம்
இரங்கிடினும் வாய்திறக்க வியலா நல்லோர்
விழிகண்டும் மொழியற்று ஊமை யாகி
விதியதனை நொந்துள்ளம் வெதும்பி னரே

\+ \+ \+

8\. வரும்போகும் வாகனங்கள் தனைமறித்து
வாங்கியெண்ணெய் சேர்த்தெடுத்துக்
கடைகள் மீது
பெருமளவில் வீசித்தீ வைத்தார் பொல்லார்
பெருநெருப்பால் அவை தீய்ந்து சாம்ப லாக
அருகிருந்தே இன்னுமின்னும் அக்கி னிக்கு
ஆனமட்டும் ஆதரவு செய்த பின்னே
கருமமொன்று முடிந்ததெனக் கரகோ ஷித்துக்
கடுகினரே இன்னுமொரு கடையைத் தேடி

\+ + +

9\. தெருத்தெருவாய்த் தேடியவர் தேர்ந்தெ டுத்துத்
தீக்குணவு படைத்தார்கள் மகிழ்ச்சி யாலே
பெருகியது வான்நோக்கி புகைகி ளப்பிப்
போர்க்கொடியைத் தூக்கியது போலு மாக
இருமருங்கு தனையுஞ்சேர்த் தெரித்த தஃதின்
இட்டத்துக் கியைந்தபடி பரவி யெங்கும்
கருகியழித் தொழித்திடவென் றெண்ணங்
கொள்ளக்
காற்றுமதன் துணைக்கென்று சேர்ந்த
தந்தோ

\+ + +

10\. வீழ்ந்தடித்து வீடுவீடாய் விரைந்தே ஓடி
வேண்டுவன வேறொருவர் கொள்ளும்
முன்னே
தாழுடைத்தே உட்புகுந்து தனக்கு கந்த
தத்தனையுஞ் சேர்த்தெடுத்துச் சென்று
ரந்தோ

வாழ்நாளிற் பாடுபட்டுச் சேர்த்து நல்ல
வசதியொடு வாழுபவர் கண்டு நெஞ்சம்
காழ்ப்புணர்வு கொண்டதஞல் காலம் பார்த்துக்
கவர்ந்தனரவ் விழிகுலத்துப் பேர்க ளம்மா

★ ★ ★

11. போனபொருள் போகட்டும் வீடு வாசல்
போஞலும் போகட்டும் இந்த வேளை
ஊனுடலோ டுயிர்மட்டுங் காத்தாற் போதும்
உறவினரோ டெங்கேனும் ஓடு வோமென்
ருனவரை முயன்றெவரு மறியா வண்ணம்
அடைக்கலத்தைத் தேடியவர் ஓடும் போது
கானவிலங் கதினிலிழி காடைக் கூட்டம்
கண்டவரைப்பின்தொடர்ந்தே ஓடிற்றம்மா

★ ★ ★

12. கற்சிலைக்கு முன்னின்று கூப்பித் தன்னைக்
காப்பாற்று தெய்வமென்ற கரங்கள் இன்று
கற்பனைக்கும் எட்டாத வாறு கெட்ட
காடையரின் முன்னின்று கூப்பிக் கெஞ்சும்
கற்களின்முன் அவ்வாறு கேட்டி ருந்தால்
கனிந்தவைகள் உருகித்தான் போகும்
ஆஞல்
கற்களிலுங் கொடியவல் லிதயங் கொண்டோர்
கருணையின்றிக் கல்கம்பா லடித்தா ரன்ருே

★ ★ ★

13. வாகனத்தில் வந்தோரை வாக னத்தில்
வைத்தேதான் எரித்தார்கள் உயிரி
னோடே
தாகமடங் காதுவெறி நாய்கள் போல
தமிழர்களைத் தேடியலைந் தார்கள் அன்னார்
போகுமிடம் அறியாது கண்ட வாறு
பேய்களென அலைந்தார்கள் அந்தோ
விந்தச்
சோகமிகு காட்சிதனைக் கண்டே நெஞ்சம்
சுக்காக நொறுங்கிற்றே துன்பத் தாலே

★ ★ ★

14. சிறைக்கூடந் தனில்பிடித்தே வைத்திருந்த
செந்தமிழ்த்தாய் பெற்றெடுத்த வீரர்
தம்மை
சிறைக்குள்ளே இருந்தவரும் புகுந்தே வந்து
சேர்ந்தோரும் சேர்ந்தொன்றாய்ச்
செகஞ் சிரிக்க
முறைகேடாய்க் கொன்றுகுவித் தார்கள் அந்த
மூர்க்கர்கள் செய்கைதனை நாவாற் செப்பத்
திறனேது நானுமொரு தமிழ னன்றோ
தெய்வ மிந்தத் தீயவரைத் தண்டிக் காதோ

★ ★ ★

15.வெட்டினராம் வாள்கொண்டு வீர நெஞ்சம்
வேருகிப் போமென்றே உயிரு டன்தான்
கொட்டினராம் எண்ணெய்தனை ரணத்தி னுள்ளே
கொளுத்தினராந் தீகொண்டே உயிர்து டிக்கக்
கட்டிவைத்துக் கழுத்தறுத்துக் கொன்ரு ரின்னுங்
கடைப்பிறப்போர் கண்களையுந் தோண்டினுராம்
இட்டப்படி இவைநடக்கக் காவ லாளர்
ஏதுமறி யாதோரா யொதுங்க லுற்ருர்

ஃ ஃ ஃ

16.பலநூறு வுயிர்களழிந் தனவே மேலும்
பலநூறு படுகாயச் செயல்கள் கண்டும்
இலவேறு வழியிதனைத் தடுக்கச் சென்ருல்
எமதுயிரும் பறிபோகும் எனவே அஞ்சி
விலகிப்பலர் இல்லங்கள் உள்ளி ருந்து
விதிதன்னை நொந்தழுதார் மனங்கு மைந்தே
பலனுக விதற்கொருநாள் பாவி யர்கள்
படுந்துன்பந் தனையுலகு பார்க்குந் தானே.

\+ \+ \+

17. குற்றமிழைத் தோர்தொகையோ கொஞ்சம் நல்ல
குணங்கொண்டு வுதவியவ ரெல்லை யற்ருேர்
நிர்க்கதியா யானவர்க்குத் தம்மா லான
நிதிபொருளுங் கொடுத்துதவி செய்தார் பெண்கள்

கற்பதனைக் காத்தவர்கள் பலபே ரன்னூர்
கருணைக்குத் தண்டனையுங் கொண்டார் கெட்ட
அற்பகுணத் தாரவர்கள் செய்கை கண்டே
ஆவேசங் கொண்டிழிசொல் சாற்றி னரே

° ° °

18. மறைத்துவைத்து மற்றவர்கள் காண வண்ணம்
மனமிரங்கி யுபசரித்துப் பசியும் போக்கி
அறிந்தவரை அழிவிருந்து காக்க வென்னும்
அன்புள்ளங் கொண்டுதமி ழல்லா தோர்கள்
பொறுத்திருந்து பின்னகதி முகாம்க ளுக்குப்
பொறுப்புடனே போகவழி செய்தார் பின்னும்
வெறுக்காது முடிந்தவரை யங்குஞ் சென்று
வேண்டியன கொடுத்துதவி செய்திட் டாரே

° ° °

19, ஆயிரந்தான் ஆண்டுகழிந் தாலு மென்ன
அழியாதே சரித்திரத்திற் கல்லின் மீது
பாய்ந்தவுளி செதுக்கிவிட்ட எழுத்துப் போன்றே
பாருள்ள நாள்வரைக்கும் நிலைத்தே நிற்கும்
ஓயாதே உலகமெமைப் பழித்து ரைக்கும்
ஒருசிலரால் நேர்ந்தபழி தொடரும் மேலாம்
தூயமனங் கொண்டாலும் எதிர்கா லத்தோர்
தொடருமிந்தப் பழியாற்தலை குனியு வாரே

30-7-1983

## 59. நாளை வருவேன்

1. விண்மணிப் பருதி மேற்கே
விரைவது கண்டா ளல்லி
தண்மதித் தலைவன் காட்சி
தருவனென் றிதழ்வி ரித்தாள்
தண்டலைக்க மலஞ் செய்ய
தலைவனைப் பிரிந்து கூம்பிக்
கொண்டனள் துயராற் சோர்ந்து
கொடியொடு துவண்டா ளந்தோ

\+ + +

2. நீதியோ வெனைம றந்து
நீசெலல் தகுமோ விந்தப்
பேதையைத் தவிக்க விட்டுப்
பிரிவது தரும மன்றே
காதலி தனியே யிங்கு
கலங்கிடு நிலைமை கண்டும்
போதலைத் தொடர்ந்தாய் நெஞ்சம்
பொறுக்குமோ வெனவி ரந்தாள்

\+ + +

3. தேகமே சோர்ந்தே னெந்தன்
திருப்பணி முடித்தேன் நாளே
வேகமாய் வருவே னுந்தன்
விருப்பினுக் குடந்தை யாவேன்
சோகமே போக்கி யெந்தன்
சொந்தமாய்க் கொள்வே னின்று
நீகவல் கொள்ளா தென்னை
நினைந்திரு கமல மென்ருள்

தினபதி
30-05-72

+ + +

# 60. துணையாய்க் கொண்டாள்

1. வண்ணமல ரிதழ்விரிய மதுவுண் வண்டு
   வந்தமர்ந்து தேனுகர்ந்து மயங்கிச் சோர
பண்ணிசைக ளெழுப்பியெழிற் பறவைக்கூட்டம்
   பறந்தாங்கு கொம்பர்களி லொன்ருய்க் கூட
தண்டலையிற் ருமரைதன் ஞதன் கண்டே
   தயக்கமறத் தாவிவிழுங் கயலு மாங்கே
நுண்ணிடையா ளொருத்தியவள் தலைவன் தன்னை
   நோக்கிவழிபார்த்தேங்கிக் காத்தே நின்ருள்

\+ \+ \+

2. தங்கநிற மேனியவன் தடந்தோள் மேரு
   தலைவியவள் துயில் கொள்ளும் மஞ்சம் நெஞ்சு
பொங்குமெழி லேறுநடை புரிவா ஞங்கு
   பொற்கொடியா ளிருக்குமிடஞ் சேரல் கண்டு
செங்கதிரோன் வரவதனுற் சிரித்தே நின்ற
   செங்கமல வெழில்காட்டுஞ் சிவந்த மேனி
எங்கணுமே மின்னலெனப் பரவ நாணம்
   ஏந்திழையாள் பூமகளைத் துணைக்க ழைத்தாள்

\+ \+ \+

## வேறு

3. தொட்டனன் துடியி டையாள்
துவண்டனள் கொடிபோற் கைகள்
பட்டதும் பாவை நெஞ்சம்
பரவசங் கொள்ள வானில்
இட்டமா யிவர்க ளிங்கே
இன் புற்றே யிருக்க வெந்தன்
சுட்டிடுஞ் சுடரோ பொல்லாச்
சுமையென நினைந்த வன்தன்

உட்டணக் கிரண மெல்லா
மொன்றெனக் கூட்டிச் செம்பொற்
தட்டெனச் சிவந்து மேற்கே
தவழ்ந்தவன் களத்தில் மானம்
விட்டவன் துயரில் மூழ்கி
வெள்கியே நடத்தல் போல
விட்டகன் றனனே வெய்யோன்
விண்மதி தோன்றி னனே

திணபதி
15-08-72

\+ \+ \+

# இவரைப் பற்றி இரண்டொரு வார்த்தை



புதுக்கவிதைப் பிரசவத்தால் மரபுக் கவிதைக்கு மாராயம் வந்துவிட்டதோ என ஐயுறுங்காலை கிழக்கு வானில் வெள்ளாப்புக் காட்டி உதயமாகிய- ''மரபிளம்பரிதி'' இந்நூலாசிரியர் ஜனாப் ஜின்னாஹ் ஷரிபுத்தீன் அவர்கள்.

தேன் மதுரத் தமிழ் விளங்கும் மருதமுனை இவரது தாயகம். இலக்கியமாமணி புலவர் மணி அல்-ஹாஜ் ஆ. மு. ஷரிபுதீன் அவர்களின் இரண்டாவது புதல்வர். 01-09-1943ல் பிறந்த இவர் இன்று ஆற்றல் மிகு டாக்டராகப் பாணந்துறையில் பணிபுரிபவர்.

இளமைப்பருவத்தில் மாணவராக இருக்கும் போது கவிதைகள் எழுதும் வளமார்ந்த இலக்கிய நெஞ்சம் படைத்தவர். ஜின்னாஹ் தந்தையாரிடம் காணக் கூடிய இலக்கியச் செழுமையில் கருக் கட்டிய வித்தாம். ஜின்னாஹ் இன்று ஆரோக்கியமான கனித்தருவாகப் புலமை பொலிந்து விளங்குவதன் பேறே இந்நூல்.

1965—1970க்கு இடைப்பட்ட காலங்களில் தினபதி கவிதா மண்டலத்தில் பிரசுரக்களம் பெற்ற இவர் பல சஞ்சிகை பத்திரிகைகளில் எழுதியும் இலங்கை வானொலியிலும் இலக்கிய அரங்குகளிலும் களம் கண்டும் வளர்ந்தவர்.

அண்ணனுக்கோர் அருமைத் தம்பியாக என்னோடு பழகும் இவர் தினபதி கவிதா மண்டலத்தில் எமது சிபாரிசில் கன்னித பிரசுரம் கண்டவர் என்பதில் எமக்குப் பெருமிதம் உண்டு. காரணம் இவரது தந்தையார் இலக்கியமாமணி புலவர்மணி அல்-ஹாஜ் ஆ. மு. ஷரிபுத்தீன் அவர்களின் மாணவன் நான்.

மரபுக்கவிதைக்கு மகுடம் புனையும் இவரது கவிதைகளை கையெழுத்துப் பிரதிகளில் கண்டு மகிழும் நான் இதைப் போன்ற பலநூல்களை இவரிடத்திலிருந்து எதிர்பார்க்கிறேன். இலக்கிய நெஞ்சங்களும் அவ்வாறே எதிர்பார்க்கும்.

—பாண்டியூரன்